AEDU

# ஏடு



10 ஆம் ஆண்டு சிறப்பிதழ்

எழுத்தறிவிப்போம்
ஏக்கம் தவிர்ப்போம்
வளமான வாழ்வளிப்போம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏடு

10ஆம் ஆண்டு

சிறப்பிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நூல் விபரம்**

| | | |
|---|---|---|
| மலர் | - | ஏடு 10 ஆம் ஆண்டுச் சிறப்பிதழ் |
| வெளியீடு | - | ஏடு நிறுவனம், கிளிநொச்சி. |
| பதிப்புரிமை | - | ஏடு நிறுவனம். |
| பதிப்பு | - | 2019- பெப்ரவரி |
| பக்கள அளவு | | B5 |
| பக்கம் | - | |
| எண்ணிக்கை | - | 500 |
| அச்சுப்பதிப்பு | - | எவக்கிறீன் அச்சகம்,<br>கே.கே.எஸ் வீதி,<br>யாழ்ப்பாணம். |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிச் செய்தி

**கலாநிதி ஆறு. திருமுருகன்,**
செஞ்சொற் செல்வர்,
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை.

அறஞ்செய்ய விரும்பு என்பது நாம் உயிர் எழுத்துக் கற்ற அன்றே எமக்கு உபதேசிக்கப்பட்ட உன்னத வார்த்தை ஆகும். ஆதரவற்றவர்க்கு அபயகரங்களாக விளங்குவதே மனிதாபிமானப் பணியாகும். அந்த வகையில் ஏடு என்ற நாமத்தில் இயங்கும் நிறுவனத்தின் மலருக்கு ஆசிச் செய்தி வழங்குவதில் மிகவும் ஆனந்தமடைகிறேன். மாதாந்தம் உச்ச வறுமையுடைய மாணவரின் கல்விக்கு உறுதுணை செய்யும் இவ்வமைப்பின் பணி போற்றுதலுக்குரியது. "கற்க மறுப்பவர வாழ மறுப்பவர்" என்றார் சுவாமி இராமகிருஸ்ண பரமாம்சர். கல்வி மனித வாழ்வுக்குரிய அரணாகும். எனவே கல்விக்காகச் செய்யப்படும் தர்மம் நீண்ட பயன் தரும். லண்டனில் இருந்து உதவும் அமைப்பினர்க்கும் இங்கு செயற்படுத்தும் நிர்வாகிகளுக்கும் இதயபூர்வமான வாழ்த்துக்களையும் நல்லாசிகளையும் தெரிவித்து அமைகிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி

**த.குருகுலராஜா,**
முன்னாள் வடக்கு மாகாணசபை உறுப்பினர்,
ஓய்வுநிலை வலயக் கல்விப் பணிப்பாளர்,கிளிநொச்சி.
கானான்,
புளியம்பொக்கணை,
கண்டாவளை.

வடபுலத்தில் குறிப்பாக கிளிநொச்சி - முல்லைத்தீவு மாவட்டங்களில் அண்மையில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கு நாட்டிலுள்ள பலரது கவனத்தையும் ஈர்த்தது. வடக்கிலும், கிழக்கிலும், தெற்கிலும் இருந்து பெருந்தொகையான நல்லுள்ளங்கள் தம்மால் இயன்ற பணம், பொருள்களைச் சேகரித்து இன்றுவரை வெள்ளப் பெருக்கினால் சிக்குண்ட மக்கள் மீண்டும் தமது இயல்பு நிலைக்குத் திரும்பவதற்கு உதவிக்கரம் நீட்டியுள்ளனர்.

இச் செயல் மனிதாபிமானம் நிறைந்த மக்களின் மனதை சாந்தமாக்கும் பெரும் செயலாகும்.

"பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல்"- குறள் 505

ஒருவருடைய பெருமையை அறிவதற்கும் சிறுமையை அறிவதற்கும் அவர் செய்யும் செயலே தக்க உரை கல்லாகும்.

வள்ளுவப் பெருந்தகையின் குறள், வெள்ளப் பாதிப்புற்றோர்க்கு உதவியவர்களின் ஈகத்தை எடுத்தியம்புவது போல், இற்றைக்குப் பத்தாண்டுகளுக்கு முன்னர் இரண்டாயிரத் துப் பத்தாம் ஆண்டில் எம்தேச உறவுகள் பலர் சேர்ந்து பிரித்தானியாவை மையமாகக் கொண்டு "ஏடு"என்ற தன்னார்வத் தொண்டு நிறுவன மொன்றை உருவாக்கி, பள்ளி மாண வர்களுக்கும், ஏங்கித் தவிப்பவர்க்கும் வளமான வாழ்வில்லாதவர்களுக்கும் சிறிய சிறிய உதவிகளைச் செய்து அவர்களது வாழ்வில் ஒளிச் சுடரை பிரகாசிக்கச் செய்துள்ளனர்.

2018 ஆம் ஆண்டு வெள்ளப் பெருக்கு ஏற்பட்டபோது வாரி வழங்கும் வள்ளல்கள், அன்று 2010 இல் முழுமையாக எல்லாம் இழந்து மீள் குடியேற்றம் பெற்றவர் என்ற நாமத்துடன் வந்த எம்மக்களுக்குக் கிடைக்கவில்லை. மிகச் சொற்பமான உதவியே எம் மக்களுக்குக் கிடைத்தது. அவ்வேளையிலேயே " ஏடு தனது பணியை ஆரம்பித்தத, மிகத் துணிச்சலுடன் தனது பணியை முன்னெடுத்துச் செல்ல பொருத்தமான தொண்டர்களை உள்ளடக்கி தனது சேவையில் மகத்தான நிறைவைக் கண்டுள்ளது.

எமது தேச உறவுகளின் நேசக்கரங்கள் எம்மக்களின் வாழ்வில் விடியலைத் தேடும் வசந்தங்களாக இருப்பது போற்றுதற்குரியது. பத்தாண்டுச் சேவை புதிய சிந்தனை வடிவம் பெற்று "ஏடு" என்றென்றும் நலமுடன் வாழ வாழ்த்தி விடைபெறுகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி

**சி.சத்தியசீலன்,**
மேலதிக அரசாங்க அதிபர்
மாவட்டச் செயலகம்,
கிளிநொச்சி.

நீண்ட காலமாக நாட்டில் இடம்பெற்ற யுத்த அனர்த்தம் காரண மாக ஊரிழந்து, உறவிழந்து, உற்றபொருள் தானிழந்தும் உயிர் கொடுத்துக் காத்த உத்தம பெற்றோரை இழந்த மாணவர்கள் உடல், உளம் பாதிக்கப் பட்டு கல்வி கற்பதில் நாட்டமில்லாதவர்களாக, வாழ்க்கையில் பற்றுதல் அற்று நற்பண்புகள் இழந்தவர்களாக, ஆளுமை விருத்திகளற்று எதிர்கால இலக்குகளைத் தொலைத்தவர்களாக வாழ்ந்து கொண்டிருக் கின்றனர்.

"அனைவருக்கும் கல்வியில் சமவாய்ப்பு" எனும் சிந்தனைக்கு செயல் வடிவம் கொடுக்கும் வகையில், அரச, அரசசார்பற்ற நிறுவனங்கள் இவர்க ளுக்கான உதவிகளை வழங்கி வருகின்றன. போருக்குப் பின்னர் கிளிநொச்சி மாவட்டத்தில் மாணவர்களின் அடைவு மட்டம் உயர்வடைந்து செல்வ தற்கு இவர்களின் மகத்தான பணி முக்கிய பங்கு வகிக்கின்றது. அந்த வகை யில் பிரித்தானியாவை தலைமையகமாகவும் இலங்கையில் கிளிநொச்சியை மையமாகவும் கொண்டு இயங்கும் ஏடு நிறுவனம் இவ்வாறான மாணவர் களை இனங்கண்டு அவர்களுக்கு உதவி வருகின்றது. AEDU (Association for Education Development of Underprivileged) அமைப்பினரது பணியும் பங்கும் மகத்தானதும் போற்றுதற்குரியதாகும்.

இவ்வமைப்பு அவலத்திற்குள்ளானவர்களுக்கு வாழ்வளித்தல் என்ற அடிப்படையில் மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு உதவித் தொகை வழங் குதல், கற்றல் உபகரணங்கள் வழங்குதல், துவிச்சக்கர வண்டிகளை வழங்குதல் போன்ற பலதரப்பட்ட சேவைகளை ஆற்றி வருகின்றது. இந்நிறுவனத்திடமிருந்து உதவி பெற்ற மாணவர்களில் பலர் பரீட்சை களில் அதிக மதிப்பெண்களையும், உயர் பெறுபேறுகளையும், உயர்வுகளையும் பெற்றிருப்பது அவர்கள் செய்துகொண்டிருக்கின்ற இச்சேவைகளுக்குக் கிடைத்த வெற்றியும் ஊக்கமுமாகும்.

அந்த வகையில் சிறப்பான சேவையாற்றி பத்து ஆண்டுகள் நிறை வினைக் காணும் இத்தருணத்தில் ஆவண நூலாக வெளியிடப்படுகின்ற இம்மலருக்கு ஆசிச் செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்வடைகின்றேன். இப்பணி சிறப்புற அமைய உழைத்த அனைவருக்கும் எனது பாராட் டுக்களையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்வதோடு உங்கள் நற்பணி தொடர எலலாம் வல்ல ஆண்டவனின் அருளாசி கிடைப்பதாகுக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி

**திரு.க.முருகவேல்,**
ஓய்வுநிலை வலயக் கல்விப் பணிப்பாளர்,
கிளிநொச்சி.

ஏடு அமைப்பின் 10 ஆவது ஆண்டு பூர்த்தி நாளில் வெளியிடப்படவுள்ள நூலுக்கான ஆசிச் செய்தியை வழங்கக் கிடைத்த சந்தர்ப்பத்தையிட்டு பெரிதும் மனம் மகிழ்வடைகின்றேன்.

கடந்த பல வருடங்களாகப் போர் அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட மாணவச் செல்வங்களுக்கான கற்றல் உதவிகளை இவ் அமைப்பு கடந்த 10 வருடங்களாக மிகவும் திறமையாக அர்ப்பணிப்புடன் செய்து வருகின்றது.

2008, 2009 காலப்பகுதியில் வன்னி மாவட்ட மக்கள் முற்றுமுழுதாக இடம் பெயர்ந்த காலம். 2010 ஆம் ஆண்டு தொடக்கம் மீளவும் எமது பிரதேசங்களில் குடியேறத் தொடங்கிய காலம். இனி இழப்பதற்கு உயிரைத் தவிர ஒன்றுமில்லை என்ற நிலையில் மீளவும் நாம் மீண்டெழ முற்பட்ட காலம். பூச்சிய நிலையிலிருந்து வாழ் வாதாரத்தை ஆரம்பித்த காலம் இந்த இக்கட்டான நேரத்தில், அதாவது 2010 ஆம் ஆண்டு இவ் அமைப்பு ஆரம்பிக்கப்பட்டது மிகவும் பொருத்தமானதும் அவசியமானதுமான செயற்பாடாகும்.

நான் கிளிநொச்சியில் கல்விப் பணிப்பாளராகக் கடமை புரிந்த காலத்தில் அமுல்ப்படுத்தப்பட்டுள்ள செயற்றிட்டங்களில் இணைந்து பணியாற்றி யுள்ளேன்.

கிளிநொச்சி முருகானந்தா கல்லூரியின் முன்னாள் பள்ளி முதல்வர் திரு.தி.வரதன் அவர்கள் தனது பள்ளியின் கல்வி மேம்பாட்டிற்காக மிகவும் கடினமாக அர்ப்பணிப்புடன் செயலாற்றி அப்பள்ளியை உயர்ந்த நிலைக்கு இட்டுச் சென்றார். அதே போல அச்சம காலத்தில் இந்த அமைப்பின் செயலாளராக இருந்து கொண்டு அரிய பெரிய சமூகப்பணிகள் ஆற்றியதை நான் நன்கு அறிவேன்.

இவ் அமைப்பை தற்போது பரந்துபட்ட அளவில் வடக்கு கிழக்கு மாணவர்கள் நலன் கருதிப் பணிகளைச் செயலாற்றத் தொடங்கியுள்ளனர். இந்த அர்ப்பணிப்பான நல்ல செயற்பாடுகளுக்காக இறைவன் என்றென்றும் இவ் அமைப்பு சார்ந்தவர்களுக்கு உடல், உள, ஆரோக்கியமான மகிழ்வான வாழ்வைத் தர வேண்டி ஏடு அமைப்பானது தொடர்ந்தும் மென்மேலும் விரிவடைந்து , மாணவச் செல்வங்களுக்குக் கை கொடுக்க வாழ்த்துகின்றேன்.

"வாழ்க வளமுடன்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி

**வேதநாயகம் தபேந்திரன்,**
மாவட்ட சமூக சேவைகள்,
அலுவலர்,
கிளிநொச்சி.

## ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்

கிளிநொச்சி மாவட்டத்தின் கல்விப் பணிகளுக்கு ஏடு அமைப்பு வழங்கி வரும் பங்களிப்பு போற்றுதற்குரியது.

இந்த நிறுவனம் தனது 10 ஆவது நிறைவினைக் கொண்டாடும் போது வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

எண்ணற்ற கல்விப் பணிகளை ஆற்றிவரும் இந்தநிறுவனம் வலிந்துதவு சமூக சேவை அமைப்பாக கரைச்சிப் பிரதேச செயலகத்தில் பதிவு செய்வதற்கான சிபாரிசைச் செய்தபேறு எனக்குக் கிடைத்தது. ஏழைகளுக்கான கல்விப் பணியில் ஆலமரமாக ஏடு நிறுவனம் வளர்ந்து நிற்கிறது.

கிளிநொச்சி மண்ணின் வளத்திற்கும், வாழ்விற்கும் தம்மை அர்ப்பணித்துள்ளவர்களின் உழைப்பால் இந்த நிறுவனம் 10 வருடங்கள் வெற்றிநடை போட்டுள்ளது. போரின் அழிவுகளால் பாதிக்கப்பட்ட கிளிநொச்சி மண்ணில் கல்வித் தரத்தை உயர்த்துவதற்கு நிறைய அர்ப்பணிப்புக்கள் தேவை.

சவால்மிக்க இப்பணியில் தமது உயரிய உழைப்பை வழங்கிவரும் ஏடு நிறுவனம் மென்மேலும் வளர வேண்டும்.

தனமும் நல்ல மனமும் உள்ள பெருந்தகைகள் உதவ அர்ப்பணிப்புள்ள சேவையாளர்கள் உழைக்கப் பெருவிருட்சமாக வளருமென்று திடமான நம்பிக்கையுடன் வாழ்த்துகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி

**திருமதி.ஆ.விக்ரர் ஜெயசிங்கம்,**
முகாமையாளர்,
மக்கள் வங்கி- பரந்தன் கிளை.

கல்விச் சமூகம் என்பது ஒரு தேசத்தின் முதுகெலும்பைப் போன்றது. அந்த வகையில் நாட்டினுடைய கல்விச் சமூகத்தினை கட்டியெழுப்பும் பொறுப்பு அனைத்து சமூக அங்கத்தவர்களினதும் தலையாய கடமையும் பொறுப்புணர்வும் ஆகும். அதனிலும், போர் அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் வறுமை காரணமாக மாணவர்கள் கல்வி கற்க முடியாத நிலைக்கு உள்ளாக்கப்பட்டு அவர்களினது எதிர்காலம் சூனியமாக மாறும் வேளையிலே அவர்களுக்கான ஒரு சிறு கரம் கைகொடுக்குமானால் அது காலத்தில் கிடைத்த பெரும் பேறாகும். அந்த வகையில் ஏடு அமைப்பு எங்கள் பிரதேசத்தில் பெரும் வரப்பிரசாதமாக இருப்பதை அவர்கள் புரியும் கைங்கரியங்களைக் கொண்டு உணர முடிகின்றது.

இங்கிலாந்து நாட்டினை தலைமைப் பணிமனையாகக் கொண்டு செயற்படும் மேற்படி அமைப்பு கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், திருகோணமலை, அம்பாறை ஆகிய மாவட்டங்களில் தங்கள் ஆதரவு கிளையினை பரப்பி நிழல் கொடுத்து வருகின்றார்கள் என்றால் அவர்களின் சமூகம் மீதான அக்கறையும், ஒரு கல்விச் சமூகத்தை கட்டியெழுப்பும் பொறுப்புணர்வும் மனம் நெகிழ வைக்கின்றது.

வாழ்வாதார உதவிகளையும், கற்றல் உபகரணங்களையும், துவிச்சக்கர வண்டிகள் போன்றவற்றையும் வழங்கி வருவதாக அறிகின்றோம். தேவை அறிந்து சேவை செய்வதும் தேவையானவர்களுக்கு சேவை செய்வதும் மிக முக்கியமானது. ஏடு அமைப்பு அதனை மிகச் சிறப்பாக ஆற்றுவதை அறிந்து திருப்தி கொள்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.

மக்கள் வங்கியின் செயற்பாடுகளும் இலாபம் என்பதைக் கடந்து சமூக நலன் சார்ந்தும் மாணவர்கள் தொடர்பாகவும் கரிசனையுடன் செயற்படுவதாக அமைந்துள்ளது. அந்த வகையில் தங்கள் அமைப்பு மக்கள் வங்கியுடன் இணைந்து மாணவர்களுக்கான உதவியினை கணக்குகளினூடாக வழங்கும் செயற்பாடுகளில் துணை நிற்பதையிட்டு மகிழ்ச்சியடைகின்றோம். தொடர்ந்தும் தங்களது செயற்பாடுகளில் துணை நிற்போம் என்பதனை இத்தால் அறியத்தருகின்றோம்.

ஏடு அமைப்பினது சேவைக்காலம் பத்து ஆண்டுகளைப் பூர்த்தி செய்கின்ற இந்நாளிலே தங்கள் சேவை தொடர்பாக எங்கள் ஆசியினை வழங்கி உங்களுடன் கலந்திருப்பதனை எண்ணி களிப்படைகின்றோம். பரந்தன் மக்கள் வங்கி கிளை முகாமையாளர் என்ற வகையில் கண்டாவளைக் கோட்ட வறிய மாணவர்களினது கல்வித் தேவைக்கான உதவியினைத் தொடர்ந்தும் தங்களது அமைப்பு ஆற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்வதுடன் அவை தொடர்பான வங்கி சார் நடவடிக்கைகளில் நாம் என்றும் துணை செய்வோம் என்பதனையும் அறியத் தருகின்றோம்.

தங்களது அமைப்பும், அதன் அங்கத்தவர்களும் நின்று நிலைத்துச் சிறப்புற செயற்பட எல்லாம் வல்ல ஆண்டவனை மக்கள் வங்கி பரந்தன் கிளை சார்பாக பிரார்த்திக்கின்றோம். ஏடு அமைப்பு ஏற்ற முற வளர வாழ்த்துகின்றோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி

*"Samasri Deshamanya"*
***S.Srigowriepala, (J.P)** All Island)*
*(Retired Manager - People'sBank)*

2010 ஆம் ஆண்டு கிளிநொச்சி மாவட்டத்தில் போர் அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டு தாய், தந்தையை இழந்த மாணவர்களின் கல்விச் செயற்பாட்டிற்கு வறுமை ஒரு காரணமாக இருக்கக் கூடாது என்பதனை உணர்ந்த அறிஞர்கள், கல்வியாளர்கள், சமூக மேம்பாட்டாளர்கள், புலம் பெயர் உறவுகள் ஒன்று சேர்ந்து உருவாக்கிய நிறுவனமே AEDU அமைப்பாகும்.

இவ் அமைப்பு கிளிநொச்சி மாவட்டத்தில் உருவாக்கப்பட்ட போது அதன் பொருளாளராக இருந்து என்னால் ஆன பணியை முழு மனத்திருப்தியுடன் அப்போதய கிளி / முருகானந்தாக் கல்லூரி அதிபரும், ஏடு அமைப்பின் செயலாளருமான திரு.T. வரதன் அவர்களுடனும், கிளிநொச்சிமாவட்ட செயலக கணக்காளரும் AEDU அமைப்பின் தலைவருமான திரு.P. ஜெயராசா அவர்களுடனும் இணைந்து ஒற்றுமையாக இந்நிறுவனத்தை வளர்த்து இன்று அது பெருவிருட்சமாக பல மாணவச் செல்வங்களுக்கு பல வழிகளில் உதவுவதை அறிந்து மனம் மகிழ்வதுடன் அதன் பணி மேலும் மேலும் சிறக்க இறைவனைப் பிரார்த்தித்து எனது ஆசிச் செய்தியை நிறைவு செய்கின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி

## ASSOCIATION for EDUCATIONAL DEVELOPMENT of the UNDERPRIVILEGED

AEDU
UK

ஏடு ஐக்கிய இராச்சியம் சார்பாக
**வைத்திய கலாநிதி அமிர்தலிங்கம் பகீரதன்**
**ஏடு இணைப்பாளர் (U.K ).**

வெள்ளத்தால் போகாது, வெந்தழலால் வேகாது -
வேந்தராலும் கொள்ளத்தான் இயலாது,
கொடுத்தாலும் நிறைவின்றி குறையாது- விவேக சிந்தாமணி.

ஏடு அமைப்பானது தனது பத்தாவது ஆண்டு நிறைவை பூரிப்புடன் கொண்டாடுகிறது. இந்த மன நிறைவுக்கு காரணிகளாக இருப்பவை நாம் கல்விக்கான சேவையை முன்னெடுப்பது என்பது மட்டுமல்லாமல் இந்த பத்து வருடங்களில் எமது அமைப்பின் வளர்ச்சியுமேயாகும். 2009 இல் இருபத்தி ஐந்து சிறார்களின் கல்விக்கு ஆதரவு அளித்த நாம் இன்று நானூறுக்கும்அதிகமான மாணாக்கர்களுக்கு அவர்களின் கல்வியைத் தொடருவதற்காக எமது உதவிக் கரங்களை நீட்டியுள்ளோம். எமது அமைப்பின் வளர்ச்சிக்கும் வெற்றிக்கும் பிரதான காரணிகளாக இருப்பது, இலங்கையில் சேவை அடிப்படையில் தொண்டாற்றும் எமது சகோதர அமைப்புகளின் உறுப்பினர்களும் இங்கிலாந்திலும், சுவிஸ்ஸலாந்திலும், ஜெர்மனியிலும் தொடர்ந்து எந்த விதமான பிரதியுபகாரமும் எதிர்பாராமல் பொருளாதர உதவிகளை வழங்கும் அன்பர்களுமேயாகும். காலத்தால் இவர்கள் வழங்கும் சேவைக்கு ஏடு ஐக்கிய இராச்சியத்தின் சார்பில் எமது நன்றியை தெரிவித்து கொள்கிறோம்.

பல விதமான அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்டு சிறு வயதிலேயே தங்கள் அன்புக்குரிய பெற்றோர்களில் ஒருவரை அல்லது இருவரையும் இழந்து பொருளாதார நெருக்கடிகளால் தங்கள் கல்வியை தொடர முடியாமல் தத்தளிக்கும் மாணவர்களுக்கு நாம் வழங்கும் இந்த சிறிய உதவி அவர்கள் தங்கள் கல்வியைத் தொடர வழிவகுக்கும் என நம்புகிறோம்.

"Uplifting the Lives of Underprivileged Children"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்கள் பெறும் கல்விச் செல்வமானது அவர்களின் வருங்காலத்தையும் வாழ்க்கை தரத்தையும் ஒளிமயமானதாக மாற்றும் என்ற உறுதியான நம்பிக்கையுடன் நாம் எடுத்த இந்த பாதையில் தொடர்ந்து செயலாற்றுகிறோம். எந்த அனர்த்தங்க ளாலும் அழிக்க முடியாத, இழக்க முடியாத கல்வியை கற்று அதன் மூலம் வருங்காலத்தில் தமது வாழ்க்கைத் தரத்தையும், தமது நாட்டின் தரத்தையும் உயர்த்துவார்கள் என்ற நம்பிக் கையுடனே எமக்கு கிடைத்த இந்த சந்தர்ப்பத்தை நாம் சரியாக பயன்படுத்தி, எம்மால் முடிந்தளவு உதவியை அந்த சிறார்களுக்கு வழங்குகிறோம். அந்த மாணவர்கள் தங்கள் பங்கை சிறப்பாகச் செய்து இந்த சந்தர்ப்பத்தை முற்றாக பயன்படுத்துவார்கள் என உறுதியாக நம்புகிறோம்.

இலங்கையில் ஏடு அமைப்பில் பங்காற்றும் எமது அன்புக்குரியவர்களுக்கும், குறிப்பாக அதன் வளர்ச்சியை தனது தலையாய பணியாக நிறுத்தி இயங்கும் அதிபர் திரு. தில்லையம்பலம் வரதன் அவர்களுக்கும், இங்கிலாந்தில் தமது கடுமையான வேலைப்பழுக்களுக்கு மத்தியிலும் இந்த நற்சேவை யில் என்னுடன் பயணிக்கும் எமது சக ஏடு உறுப்பினர்களுக்கும் எமது மனம் நிறைந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

'வயிற்றுக்கு சோறிட வேண்டும்! இங்கு
வாழும் மனிதருக் கெல்லாம்
பயிற்றிப் பலகல்வி தந்து! இந்தப்
பாரை உயர்த்திட வேண்டும்'

**- பாரதி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ASSOCIATION for EDUCATIONAL DEVELOPMENT of the UNDERPRIVILEGED

AEDU
KN

## கிளிநொச்சி "ஏடு" நிறுவனத் தலைவரின் வாழ்த்துச் செய்தி

**ப.ஜெயராஜா,**
பிரதம கணக்காளர்,
கணக்குகளும் கொடுப்பனவும்,
மாகாண திறைசேரி
வடமாகாணம்.

"தெய்வத்தால் ஆகாது எனினும் முயற்சி
தன் மெய் வருந்தக் கூலிதரும்"

என்ற உலகப் பொதுமறையின், சமூக விழுமியக் கருத்தை மனதிலே நிறுத்தி "ஏடு" என்ற மலருக்கு ஆசிச் செய்தி வழங்குவதில் பேருவகை அடைகின்றேன்.

சமூகத்தை தாங்கும் தூண்கள் பல இருப்பினும், ஆபத்து என்ற இடத்தில் உதவும் கரமாய் உள்ள "ஏடு" நிறுவனம் ஒர் சமூகத் தூண் என்றே கூறுவேன். "ஏடு" என்ற நாமம் எண்-எழுத்து கல் என்ற தொனியை உட்கருத்தாய் கொண்டு, குறிப்பாக சமூகத்தில் கற்றலில் இடர்களை எதிர்கொள்ளும் மாணவர்களும் கல்வி அறிவுடன் திகழ வேண்டும் என்ற உயர்ந்த சிந்தனையில் தன்னாலான உதவியை கல்வியை மையப்படுத்தி அது சார்ந்த பிரச்சினைகளை இனங்கண்டு உதவும் கரமாய் செயற்படுவது போற்றுதலுக்கும் தலை வணங்குதலுக்கும் உரிய விடயமாகும். வடக்கு கிழக்கு மாகாணங்களில் உள்ள வாழ்வாதாரத்தில் இடர்படும் குடும்பங்களினையும் மாண வர்களையும் ஜாதி மத பேத வேறுபாடுகளின்றி இனங்கண்டு அவர்களது வாழ்விடங்களைத் தரிசிப்பதுடன் அவர்களுக்கான உதவிகளை இன்முகத்துடன் செய்யும் இவ் அளப்பரிய சேவையை உண்மையில் நாம் எல்லோரும் "நீள நினைந்து போற்றுவோம்".

"ஏடு" நிறுவனமும் நிறுவனம் சார்ந்த உறுப்பினர்களும் என்றும் நலமுடனும், அவர்களின் எண்ணத்தின் வழி உதவிகளை வாரிவழங்க எல்லாம் வல்ல இறையருள் அவர்களுக்கு துணை புரிய வேண்டும் என இவ்விடத்தில் ஆசி கூறுகிறேன்.

சமூகத்தில் செய்ய தகாதவற்றை செய்வதாலும், செய்ய வேண்டியவற்றை செய்யாமல் விடுவதாலும் கேடு விளையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதை அன்றே தமிழ் மறையில் வள்ளுவர் கூறியுள்ளார். ஆம்!, உலகில் பிறந்தோம் வாழ்ந்தோம் இறந்தோம் என்று இருந்துவிடக்கூடாது. எங்களால் யார் கண்ணீரைத் துடைக்க முடியுமோ எவர் துன்பத்தில் பங்கேற்க முடியுமோ அவர்களுக்கான உதவியைப் புரிய வேண்டியது மனிதப் பிறவியின் மகத்துவம். எனவேதான்

" செய்தக்க அல்ல செயக் கெடும் செய்தக்க
செய்யாமை யானும் கெடும்"

என்று எழுதிய வள்ளுவரின் குறளுக்கு தலை சாய்த்து "ஏடு" நிறுவனம் தன் பணியை அறுகு போல் கிளிநொச்சியில் மட்டுமல்ல மன்னார், முல்லைத்தீவு, திருகோணமலை, அம்பாறை, வரை ஏறத்தாழ 400 மாணவர்களுக்கு உதவி புரிந்து வருவது பாராட்ட வேண்டிய ஒன்றாகும். 2010ஆம் ஆண்டில் ஸ்தாபிக்கப்பட்ட இந்த ஏடு நிறுவனமானது தனது 10வது வருடத்திலே காலடி எடுத்து வைக்கும் இவ்வேளையில் அது ஆண்டுதோறும் 10 மில்லியன் ரூபாவினை வறுமைக் கோட்டிற்கு உட்பட்டு வாழும் இன்னல்படும் சிறார்களின் எதிர்கால கல்வி விருத்திக்கான மனித மூலதனத்தின் முன்னேற்றத்திற்கு முதலீடு செய்கிற முயற்சியானது பாராட்டப்பட வேண்டிய ஒன்றாகும் என்பதுடன் காலத்தின் தேவையறிந்து உருவாக்கப்பட்ட இந்நிறுவனத்தின் உருவாக்கத்திற்கு வித்திட்ட கிளிநொச்சி நிர்வாகத்தினருக்கும், நிதி உதவி வழங்கிவரும் ஐக்கிய இராச்சியம் மற்றும் புலம்பெயர் நாடுகளில் வாழும் தமிழ் உறவுகளிற்கும் ஏடு சார்பாக நன்றியை தெரிவிப்பதோடு, ஏடு அமைப்பின் இணைப்பாளர், வைத்திய கலாநிதி அ.பகீரதன், ஈசன், பாண்டியன் மற்றும் ஏடு ஐக்கிய இராச்சிய நிர்வாகத்தினருக்கும் நன்றியை தெரிவித்துக்கொள்கின்றேன். இறைவனது ஆசியுடன் ஏடு நிறுவனமானது பல்லாண்டு காலம் மேன்மேலும் வளர்ந்து பலரது வாழ்விற்கு ஒர் ஏணியாக அமைய வாழ்த்துகின்றேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி

## ASSOCIATION for EDUCATIONAL DEVELOPMENT of the UNDERPRIVILEGED

AEDU

MN

**வைத்திய கலாநிதி மு. கதிர்காமநாதன்,**
தலைவர்,
ஏடு,
மன்னார் மாவட்டம்.

எழுத்தறிவிப்போம் ஏக்கம் தவிர்ப்போம் வளமான வாழ்வளிப்போம் என்ற தொனிப்பொருளில் தாய், தகப்பன் இருவரையுமோ அல்லது தகப்பனை மட்டுமோ இழந்து இடர்படுகின்ற மாணவர்களின் கல்வியைத் தொட ஊக்கமளிக்கும் முகமாக ஏடு நிறுவனம் ஜூலை 2009 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு ஜூன் 2011 இல் பதிவு செய்யப்பட்ட ஒரு தொண்டு நிறுவனமாக வளர்ச்சி பெற்றது. சிறுவர் இல்லம் என்ற பெயரில் பிள்ளைகளை அவர்களின் உறவினர்களிடம் இருந்து பிரித்தெடுத்து வளர்க்கும் நிறுவனங்கள் தோற்றுவிக்கப்பட்ட யுத்த பேரழிவு காலத்தில் ஏடு நிறுவனத்தின் அறங்காவலர்கள் ஒரு வித்தியாசமான கோணத்தில் சித்தித்து ஒரு புலமைப்பரிசில் வழங்கும் திட்டத்தின் மூலம் குழந்தைகளின் முழுமையான கல்வி வளர்ச்சிக்கும் சிறந்த வருங்காலத்தை உருவாக்குவதற்கும் நீட்டிக்கப்பட்ட குடும்பம் மற்றும் அவர்கள் சார்ந்துள்ள சமூகம் ஆகியவற்றின் பின்னணியிலேயே அவர்களை வளர்க்கும் திட்டம் மிகவும் இன்றியமையாதது என்ற உறுதியான நம்பிக்கையினாலே ஒரு தசாப்த காலமாக இந்த ஏடு நிறுவனம் நாளொரு வண்ணம் பொழுதொரு மேனி வளர்ந்து வருகின்றது. இதனுடைய வளர்ச்சிக்காக அரும்பாடுபடும் வைத்திய கலாநிதி அமிர்தலிங்கம் பகீரதன், திரு.தம்பிராஜா அழகேஸ்வரராஜா, திரு.ஆறுமுகம் கங்கேஸ்வரன், செல்வி தேனுகா ஜெகதீஸ்வரம்பிள்ளை, திருமதி பூர்ணிமா கருணகடாச்சரன், திரு. அர்ஜீன் மகேந்திரன், திரு.கணநாதன், செல்வி. பிருந்தா பிரபாகரன். கலாநிதி சுபாத்திரா பூலோகசுந்தரம், திருமதி. சாம்பவி

"Uplifting the Lives of Underprivileged Children"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சத்தியமூர்த்தி, திரு.மகேஸ்வரன் சங்கர், திரு.சங்கரவேல் சங்கர், திரு.பரமசாமி சோமசுந்தரம் ஆகிய 13 உறுப்பினர்களின் தியாகங்களும் அர்ப்பண சிந்தையுமே இந்த பத்து வருட காலமாக ஏடு நிறுவனத்தைக் கொண்டு நடத்துவதற்கு உறுதுணையாக இருந்தது என்பதில் எவ்வித ஐயமில்லை.

மன்னார் மாவட்டத்தில் ஏடு நிறுவனம் 2014 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. இந்நிறுவனம் அமைக்கப்பட வேண்டுமென்பதில் முழு ஆர்வத்துடன் பங்காற்றிய அப்போதைய கிளிநொச்சி மகாவித்தியாலய அதிபரும் தற்போதைய யாழ்.யூனியன் கல்லூரி அதிபருமான திரு.சி.வரதன் அவர்களை எம்மால் என்றும் மறக்க முடியாது. அத்துடன் இது அமைக்கப்பட்ட காலகட்டத்தில் எம்மோடு உறுதுணையாக இருந்து இன்றும் தொடர்ந்து தமது சேவைகளை ஆற்றிவரும் பிரம்மஸ்ரீ மனோ ஐங்கரசர்மா அவர்களையும் திரு.க.சந்திரகாந்தன் அவர்களையும் நாம் இந்நாளில் நினைவுகூர கடமைப்பட்டுள்ளோம். 15 மாணவர்களுடன் தொடங்கப்பட்ட ஏடு நிறுவனம் இன்று 75 மாணவர்களுடன் இரண்டு பல்கலைக்கழக மாணவர்களுக்கும் தம் கல்வியைத் தொடர உதவி வழங்கி வருகின்றது. அத்துடன் பாடசாலை செல்ல வசதியாக 11 மாணவர்களுக்கு துவிச்சக்கர வண்டிகளும் வழங்கப்பட்டுள்ளது. அத்துடன் வகுப்பில் முதலிடம் பெறும் மாணவர்களுக்கு விஷேட பரிசில்களும் மற்றும் கல்விக்கான உபகரணங்களும் வழங்கப்பட்டுள்ளன. அளப்பெரும் சேவையை வழங்கிவரும் இந் நிறுவனத்தின் 10 வருட நிறைவைப் பாராட்டி பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு வாழ வாழ்த்தி நிற்கின்றோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி

## Association for Educational Development of the Underprivileged

AEDU
MU

**த.ஸ்ரீபுஸ்பநாதன்.**(அகில இலங்கை சமாதான நீதவான்)
தலைவர் ஏடு முல்லைத்தீவு.
கோட்டக்கல்விப் பணிப்பாளர்
கரைதுறைபற்று.
முல்லைத்தீவு.

இறுதி வன்னி யுத்தத்தில் பெருமளவில் பாதிப்புக்களை கண்டுள்ள மாவட்டம் முல்லைத்தீவு. யுத்தத்தின் பின்னராக பல்வேறு பாதிப்புக்களிலிருந்தும் மீண்டெழ முடியாதவர்களாக மக்கள் பல்வேறு இன்னல்களை இன்று வரை அனுபவித்து வரு கின்றனர். சமூக பொருளாதார அபிவிருத்தி திட்டங்கள் சிறியள வில் மேற் கொண்டிருந்தபோதும் தனிப்பட்ட குடும்ப ரீதியான பொருளாதார விருத்தியிலும் கல்வி ரீதியில் பல பிரச்சனைக்கு முகம் கொடுக்கின்றனர். தாய் தந்தை இழந்த பிள்ளைகள் யுத்தத்தில் அங்கவீனம் அடைந்த பெற்றோர்களின் பிள்ளைகள் கல்வியை தொடர்வதில் பல பிரச்சனைகளை எதிர் கொள்கின்ற னர். அவ்வாறான பிள்ளைகளின் கல்வித்தேவையை நிறைவு செய்வதற்காக AEDU அமைப்பினரின் பங்களிப்பு காலத்தின் தேவையறிந்த மிக முக்கிய பணியாகும்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் 2013ம் ஆண்டு தொடக்கம் AEDU அமைப்பின் உதவி மாணவர்களுக்கு கிடைக்கப்பெற்று வருகின்றது. இது பல மாணவர்களின் கல்வித்தேவையை பூர்த்தி செய்து வருகின்றது தற்போது முல்லைத்தீவு கல்விவலயத்தில் 30 ற்கு மேற்பட்ட மாணவர்களுக்கு உதவிகள் கிடைக்கப் பெறு கின்றது. தற்கால கட்டத்தில் சமூக நோக்கு, சமூகப்பார்வைகள் குறைவடைந்து சுயநோக்கு, சுயலாபம் என்ற அடிப்ப டையில் அதிகளவான மக்கள் தமது வாழ்க்கையில் பயணித்துக்கொள் கின்றார்கள். AEDU அமைப்புடன் இணைந்து செயற்படுகின்ற கொடையாளர்கள் அதை சரியான முறையில் நடை

"Uplifting the Lives of Underprivileged Children"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறைப்படுத்துவதற்கு பிரதேச ரீதியாக செயற்படுகின்ற அமைப்புகள் என்பவற்றுக்கு எனது வாழ்த்துக்களை தெரிவித் துக்கொள்கின்றேன். தமக்குள்ள நேரத்தில் தமது உழைப்பின் பகுதியையும் நேரத்தின் பகுதியையும் மாணவர்களுக்காக பயன்படுத்துவதிலும் விசேடமாக இறுதி யுத்தத்தில் பாதிக்கப்பட்ட எம்குழந்தைகளின் எதிர்காலத்தை கருத்தில் கொண்டு அவர்கள் சிறப்பாக வாழ்வதற்கும் தமது அர்ப்பணிப்பை செய்து வருகின்றனர். இவ்வாறான பணிக்காக அவர்களுக்கு எனது பாராட்டுக் களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

AEDU பணிகள் தொடர்வதற்கும் அவர்களுக்கு நல்ல ஆரோக்கியமும் ஆயுளும் கிடைக்க எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றேன். AEDU உதவிகளைப் பெற்றுக்கொள்ளும் மாணவர்களும் பெற்றோர் பாதுகா வலர்களும் கிடைக்கப்பெறும் கல்வி ஊக்குவிப்பை சரியான முறையில் பயன்படுத்திக்கொள்ளவேண்டும். கல்வி ஊக்கு விப்பைப் பயன்படுத்தி நல்ல கற்றற் பேறுகளை அவர்கள் வெளிக்கொணர வேண்டும் அதன் மூலமே சரியான இலக்கு எட்டப்படும்

கல்விக்காக உழைக்கும் AEDU சார்ந்த அனைவரை யும் பாராட்டி வாழ்க வளமுடன் என்று வாழ்த்திக்கொள் கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Greeting Massage

## Association for Educational Development of the Underprivileged

192/44, lower Road Orrshaill Trincomalee

AEDU

TR

***Dr.E.G.Ganakunalan***

Programme Coordinator

It is with Great Pleasure to send this message to the souvenir being published to mark the 10th Anniversary of AEDU in Srilanka. I take this opportunity to heartily congratulate the team of the AEDU - UK for **"Be the Inspiration"**,on achieving their Goal in educating under privilege students in the rural area in Srilanka,

I have known Dr.A.Baheerathan & his team, for a long time. I have also observed them as a conscientious and dedicated people, who understands the needs of the community. With their experience in the Social Service field, I am sure that they are doing an enamours service to the needy people.

The impotent mission and the objectives of this programme is to uplift the conditions of the poorest of the poor and under privileged children, to attend Schools without failure. This most important & needy programme has earned a High reputation to AEDU-UK among the local community. Your contribution had really **laudable** & very much appreciated.

AEDU with the **10** years of history had done marvellous services not only to the School Children but also to their family. I have noticed year after year the commitment and actions has been changing the lives of many people in the community for the better in the most significant and lasting ways.

Also, my congratulation to the local leaders in Srilanka & their team for having steered the AEDU through commendable achievements.

Each year is a new beginning, a new chance to strive for greatness. I take this opportunity to wish AEDU Team every success in their activities during 20119 period & future, under the Motto of " Service above Self ".
I take this opportunity to heart fully congratulate the AEDU-UK team for their excellent service to the new generation



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி


## ASSOCIATION for EDUCATIONAL DEVELOPMENT of the UNDERPRIVILEGED

Market Road, Akkaraipattu

AEDU
AM

**கலாநிதி அனுசூயா சேனாதிராஜா**
தலைவர்,
ஏடு, அம்பாறை.


இவ் ஏடு என்று அழைக்கப்படும் நிறுவனம் இங்கிலாந்தில் இருந்து செயற்பட்டுக் கொண்டிருக்கிறது. அம்பாறை மாவட்டத்தில் பின்னதங்கிய கிராமங்களில் வறுமைக் கோட்டின் கீழ் கல்வி கற்கும் மாணவர்களை அடையாளம் கண்டு அவர்களின் கல்வி வளர்ச்சிக்கான பண உதவிகளை யும், கற்றல் உபகரண உதவிகளையும் செய்து வருகிறார்கள். இவ் அமைப்பு இங்கிலாந்தில் நிதி சேகரித்து இலங்கையில் பல பிரதேச மாணவர்களின் கல்வி மேம்பாட்டுக்காக பல இன்னல்களையும் தாண்டி உதவி செய்து கொண்டியிருக்கின்றனர். இவ் ஏடு அமைப்பின் உறுப்பினர்கள் மாணவர்களின் நலனுக்காவே தம்மை அர்ப்ணித்து செயற்ப்பட்டுக்கொண்டிருக்கின்றனர். இவர்களின் பணி மென்மேலும் தொடர வேண்டுமென்று எல்வாம் வல்ல இறைவனை வேண்டி வாழ்த்தி நிற்கின்றேன். இப்பணி மேலும் வளர வாழ்த்துக்கள்.

**"Uplifting the Lives of Underprivileged Children"**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஏடு அமைப்பின் ஒன்று கூடல் நிகழ்வு - 2018
## (கிளி/கிளிநொச்சி மகாவித்தியாலயம்)


















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தியத் துணைத்தூதுவர் கௌரவ திரு. ஆ.நடராஜன் அவர்கள்
முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டார்....






















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாணவர் நிகழ்வும், துணைத் தூதுவர் கௌரவிப்பும்
## வாழ்வாதார உதவித்திட்டங்களுக்கு காசோலைகள் வழங்கல் - 2018























Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாணவர் கௌரவிப்பும், துவிச்சக்கர வண்டி வழங்கல் நிகழ்வும் - 2018






















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏடு அமைப்பின் மன்னார், கிளிநொச்சி, நிர்வாகக் குழுவினர் விருந்தினர்களுடன்...









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஏடு

பட்டாம் பூச்சிகளாய்- நாம்
பவனி வந்திடவே
எமக்கு உதவி புரிந்திடும்
ஏட்டு நிறுவனமே
என்றென்றும் எமக்கு வேண்டும்.

த.பிரியன்
தரம்-05.

# இனிய வாழ்த்துக்கள்

என்றென்றும் - என் இனிய "ஏடே - நீ
என்றும் வளமுடன் வாழ்க!
மென்மேலும் வளர்க!
எனது கல்விக்கு
தடையாய் விளங்கிய
வறுமைப் பிணியை நீக்கி
என் கல்வியை ஊக்குவித்த
"ஏடே" உனக்கு என்
இனிய வாழ்த்துக்கள்!

10



**க.கிருசன்**
தரம்-02.
கிளி / செம்மன்குன்று
அ.த.க.பாடசாலை.



# வாழ்வு தந்த தீபம்

சின்னஞ்சிறு சிட்டுக்கள் நாம்
சிறகடிக்க வழி தந்த ஒவி தீபம்
எம் வாழ்வின் விடியல்
ஏடுகள் எனும் ஒவி தீபம்
பதுங்கி இருந்த எம்மை
நம்பிக்கை எனும் விடியலை
எம் வாழ்க்கைக்குத் தந்த தீபம்
ஏடுகளே வாழி என்றும் நீடுழி
சுடர் வீட்டு.

**ச.சுஜீதன்,**
செம்மன்குன்று,
பூநகரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சின்னஞ் சிறு சிட்டுக்கள் நாம்
சிறகடிக்க வழி தந்த ஒளி தீபம்
எம் வாழ்வின் விடியல்
ஏடுகள் என்னும் ஒளி தீபம்.

த.யாழவன்,
செம்மன்குன்று,
பூநகரி.

# வாழ்க நீ பல்லாண்டு

அன்னையாய் எனைத் தாங்கி
அரவணைப்பில் சொந்தங்களாகி – கல்வி என்ற
ஏணியில் என்னை ஏற்றி வைக்கும்
என் தாய் இலக்கணமாம் என்
ஏடே உன் புகழ் பாட என்சிறு
கவி போதாது என் இதயத்தை
மலராய் தூவி வாழ்த்துகின்றேன்
வாழ்க நீ பல்லாண்டு வளர்க நாடெங்கும்
உன்புகழ்.



ர.சர்ணிகா,
தரம் - 10.
கிளி/பூநகரி மத்திய கல்லூரி,

# ஈன்ற தாயைப் போல...



அன்னையாய் அச்சமிட்டு நாளில்
தொங்கிய முகத்தை உமது திருக்கரத்தால்
நிமிர்ந்திட செய்பவர் நீர்
உங்களின் செயல்கண்டு முத்தென வானத்தின்
நட்சத்திரம் போல் மின்னிட செய்பவர் நீர்
சித்திர கல்விச்சோலைக்குள்ளே
ஒரு அடையாளத்தை ஏற்படுத்துபவர்
ஈன்ற தாயைப் போன்று
அனைத்து ஏட்டு நிறுவன
உதவிப் பெருந்தகைகளை வணங்கி
எங்கள் வாழ்த்துக்கள்
திருவாய்மலர வாழ்த்தருள்கின்றேன்.

ர.வானுஜா,
தரம் - 07
கிளி/பூநகரி மத்திய கல்லூரி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏடு பணி தொடர வாழ்த்துக்கள்...

**சி.மகேந்திரராஜா,**
பிரதி அதிபர்
கிளிநொச்சி மகாவித்தியாலயம்.

பற்பல அமைப்புக்கள் பற்பல நோக்குடன் ஆரம்பிக்கப்பட்டு செயற்பட்டு வருகின்ற போதிலும் ஏடு அமைப்பானது காலத்தின் தேவை கருதி தேவையான காலத்தில் தேவைப்படுவோருக்கு உதவும் நோக்குடன் ஆரம்பிக்கப்பட்டதோர் அமைப்பாகும். கற்க வேண்டும் என்ற பேரவா கொண்டவர்களாகவும் அதேவேளை தந்தை இழப்பு, தாய் இழப்பு, இருவரும் இல்லாத நிலை வறுமையின் கொடுமை என்பவற்றில் சிக்கி கல்வியைத் தொடர்ந்து கற்க முடியாது இடை விலகும் நிலையில் உள்ள மாணவர்களை இனங்கண்டு அவர்கள் கைகள் தொடர்ந்தும் ஏடுகளைத் தாங்கி நிற்க ஏடு நிறுவனத்தின் பங்கு மிகவும் காத்திரமானது.

முகமறியாப் பிள்ளைகளின் எதிர்காலத்தினைக் கருதி நிகழ்கால வாழ்வின் மகிழ்ச்சியின் ஒரு பகுதியை இழந்து பனி வெயில் பாராது பகலிரவாய் பணியாற்றி இப்பிள்ளைகளையும் தம் பிள்ளைகளாய் எண்ணி உழைத்து உதவி புரியும் புலம் பெயர்வாழ் உறவுகளின் பணி புனிதமானது.

ஏழையின் சிரிப்பிலேயே இறைவனைக் காணலாம் என்ற உயர் கருத்திற்கு உருவம் கொடுத்து உதவிடும் இவர்கள் பணி பணத்தை பொருத்தமின்றி வீணாக அள்ளி இறைக்கும் ஏனையவர்கட்கும் ஓர் எடுத்துக்காட்டாகும்.

உதவுவோரிடம் இருந்து உதவி பெறுவோர்க்கு உரிய உதவி சரியாகச் செல்வதில்லை என்ற பல குற்றச்சாட்டுக்கள் நிலவும் இக்காலத்தில் ஏடு அமைப்பின் உதவியானது உதவி பெறுவோர்க்கு முழுமையாக சென்றடைவதில் உயர்ந்த பங்காற்றும் அமைப்பின் உறுப்பினர்கள் யாவர்க்கும் அவர்கள் பணி சிறக்க எனது வாழ்த்துக்களைக் கூறுகின்றேன். குறிப்பாகக் கல்விப் பணியுடன் சமூகப் பணியையும் மிகச் சிறப்பாக ஆற்றி நிற்கும் அதிபர் திரு. தி. வரதன் அவர்கள் பணி மேலும் சிறக்க இறைவன் அவர்களுக்கு நல்ல பலத்தையும் வளத்தையுத் வழங்க வேண்டும் என்று பிரார்த்திப்பதுடன் இப்பணியுடன் தொடர்புடைய அனைவரையும் வாழ்த்தி இவ் உதவிகளைப் பெறும் பிள்ளைகள் தாமும் பிறருக்கு உதவ வேண்டும் என்ற எண்ணத்துடன் வாழ்ந்து வாழ்வில் வெற்றிபெற வாழ்த்தி நிறைகின்றேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஞா.கலாணி,
தரம்-06,
கிளி/பூநகரி/
ஸ்ரீ விக்கிணேஸ்வரா
வித்தியாலயம்.

## ஏங்கிய வேளையில் கை கொடுத்தாய்...!

தந்தை இன்றிய நிலையில் – என்
கல்வியைத் தொடர
முடியுமா? முடியாதா? என– நான்
ஏங்கிய வேளையிலே
தந்தையாய் நின்று – என்
கல்வியைத் தொடர உதவிய
என் இனிய "ஏடே"– உனக்கு
என்றும் எனது இனிய– நல் வாழ்த்துக்கள்!
உரித்தாகட்டும்.

ஏழை எங்கள் வாழ்வுதனில்
என்றுமே வண்ணமான
ஏடே என்றென்றும் நீ வாழ்க!



சு.திலக்சி,
கிளி/செம்மன்குன்று
அ.த.க.பாடசாலை.

## என் இனிய ஏடே...



ஞா.கணியரசி.
தரம் - 04,
கிளி/செம்மன்குன்று
அ.த.க.பாடசாலை.

தந்தையை இழந்த வேளை
தாயின் உதவியுடன் - நான்
எனது கல்வியைத் தொடர - இருளாய்
இருந்த என் வறுமைக்கு - ஒளியாய்
திகழ்ந்த என் இனிய "ஏடே"- நீ
என்றும் நீடூழி வாழ்க!
என்றென்றும் நீ வாழ என்
இனிய வாழ்த்துக்கள்!

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அமரர் ஆறுமுகநாதன் வீரசிங்கம் அவர்களின் ஞபகார்த்தமாக கற்றல்வள நிலையத் திறப்புவிழாவும்
கற்றல் உபகரணங்கள் வழங்கல் நிகழ்வும் - கிளி/ஐயனார்புரம் அ.த.க.பாடசாலை...




















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation

# I SAY THANKS AND GREETINGS TO THE AEDU

**MR.M.MARIYARASA**
**PRINCIPAL**
**KN /VALAIPPADU R.C.T.M.SCHOOL**

I myself and on behalf of bonefishes of valaippadu society is pleasure in giving the message for the celebration of $10^{th}$ years anniversary .in fact, when our students and parents don't know the wayof education and due to the trauma of genocide of Tamils in vanni. At the time the EADU has uplifted our students to learn without any fear.

Our students and parents had lost not only their believes towards the future but also their ways of incoming to the life. At the moment AEDU appears alight house for the students to continue their studies.

I think AEDU SPENDS a lot of money for the students who have been affected by the war to stand towards their goals and also it has given transport facilities.
I am very much happy to express my sincere thanks for the contributors and their officer of the AEDU because of each of you scarifies your time and money for our pupils.

Education is the passport to the future, for tomorrow belongs to those who prepare for it today. AEDU prepare the students for the better future with huge support of money and has offered the weapons which change the world in every students 'hands who has lost their parents and future faith.

Especially I would like to thank Mr.T.VARATHAN who is engaging the secretary of AEDU in KILINOCHCHI DISTRICT.HE is the MAN to conduct this programme in very transparency manner. And also He is the person to work without seeing day and night for the students.

Finally, I would like to wish you all (contributors and officers) to be successful with your effort and we shall always give our support for you to continue your service for our pupils.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## என் கல்வி வாழ்வு

என் கல்வி வாழ்வு
ஒளி பெறவே
தீபம் போல வந்தாயே!

சு.டிலக்சி,
கிளி/பூநகரி/மத்திய கல்லூரி.

## ஏடு

ஏழைச் சிறார்களுக்கு
ஏராளம் உதவி செய்யும்
ஏட்டு நிறுவனமே
என்றென்றும் எமக்கு வேண்டும்.



உ.கவி,
தரம் -04,
கிளி/செம்மன்குன்று
அ.த.க.பாடசாலை.

## உயர வைக்க ஏணியாய் நின்ற ஏடே



ஆழியாய் நின்று என்னைச் சுமந்து
ஏணிபோல் எனை உயர வைக்க
தோணியாய் நின்ற ஏடே
உன் பணியை வார்த்தையால் அளந்திட
இந்த ஜென்மம் போதாது
வாழ்க நீ வளர்க உன் பணி.

ம.கல்பனா,
தரம் - 13. கலைப்பிரிவு.
கிளி/பூநகரி மத்திய கல்லூரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஏடு அமைப்பின் ஒன்றுகூடல் நிகழ்வு - திருகோணமலை, மன்னார்






















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஏடு அமைப்பின் ஒன்றுகூடல் நிகழ்வு - மன்னார் - அம்பாறை






















அம்பாறை நிர்வாகக் குழுவினர்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










Digitized by Noolaham Foundation



# ஏடு

வெள்ளை உடை அணிந்து
பள்ளி சென்றிடவே
பற்பல உதவிகள் புரிந்திடும்
ஏட்டு நிறுவனமே
என்றென்றும் நீ! வாழ்க!

சி.தமிழ்நிலா
தரம் -04,
கிளி/செம்பன்குன்று அ.த.க
பாடசாலை.

# ஏடு



எம் கல்வியின் தோழன் நீ - எம்
கல்வியை ஊக்குவிப்பவனும் நீயே
எம் கல்வி வளர்ச்சிக்கு உரமிடுபவனும் -நீ
என்றென்றும் நீடூழி வாழ்க வளர்க எம் ஏடு.

சி.காவியா,
தரம் -05,
கிளி/பூநகரி மத்திய கல்லூரி.

# ஏட்டு நிறுவனம்

இணையில்லா கல்விதனை
இடர்கள் இன்றி பயின்றுவிட
இங்கிதமாய்
இங்கு வந்து
எமக்கெல்லாம் உதவி செய்யும்
இணையில்லா நிறுவனம் தான்
இனிய நல் ஏட்டு நிறுவனம்

பல்கலையும் நாம் பயில
பரிவுடனே
பணி புரியும்
பார் போற்றும் நிறுவனம் தான்
பண்பான ஏட்டு நிறுவனம்

நானிலம் போற்றிடவே
நாமெல்லாம் வாழ்த்திடவே
நல்லதொரு நிறுவனமாம்
நம் ஏட்டு நிறுவனம்
என்றென்றும் வாழ்ந்திடனும்
உன்தன் புகழ் பரவிடனும்

ஞா.கனியரசி
தரம் -04,
கிளி/செம்பன்குன்று அ.த.க
பாடசாலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏட்டின் அளப்பரிய பணி...

**திரு.சி.ஜோன் செல்வரட்ணம்**
Sp.Trd. Maths, B.ed, M.ed, PGDEM, SLPS -3.
கிளி / பளை றோ.க.த.க.பாடசாலை,
கிளிநொச்சி.

எமது கிராமிய சூழலைக் கொண்ட பாடசாலையே நம்பி கல்வி கற்கும் தாய், தந்தை அற்ற மிகவும் வறிய குடும்ப பின்னணியைக் கொண்ட மாணவடகளின் கல்விக்கு ஏடு நிறுவனம் ஒரு தெய்வீகப் பணியை ஆற்றுவதையிட்டு எனது மட்டற்ற மகிழ்ச்சியை முதலில் தெரிவித்துக் கொள்கிறேன். இந்நிறுவனம் உயிரோட்டமாக இயங்குவதற்கு அதன் செயலாளராக செயற்படும் திரு.தி.வரதன் அவர்களின் பணி வியக்கத்தக்கது என்பதை ஒரு வரியினால் அளவிட முடியாது. நான் இவ் ஏடு நிறுவனத்துடன் கடந்த 5 வருடங்களாக தொடர்பைப் பேணி வருபவன் என்ற வகையில் எனது பாடசாலை மாணவர்கள் பலர் நன்மைகளைப் பெற்று கல்வியில் சிறந்து விளங்குகின்றார்கள். எனவே தொடர்ந்தும் இவ்வமைப்பு தன்னாலான பணிகளைக் கிராமியப் பின்னணியைக் கொண்ட வறிய மாணவர்களுக்கு முழு மூச்சாக உதவும் என்பதில் ஐயமில்லை. அந்த வகையில் எமது மாணவடகளுக்கு தொடர்ந்தும் பணிகளை ஆற்றி மாணவடகளின் கல்விக் கண்களைத் திறந்து வைக்கும் என்பதில் சந்தேகமில்லை. எனவே இவ்வமைப்பு உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் சமூகப் பணியாகக் கருதி வழிநடத்துபவர்களை நான் நெஞ்சாரப் பாராட்டுவதுடன் எல்லாம் வல்ல இறைவன் இவ் ஏடு அமைப்பையும், அதில் தொண்டர்களாக பணி புரிபவர்களையும் காக்கும் நிறைவான சக்தியை அளிக்க இறைவனின் ஆசியை வேண்டி விடை பெறுகின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐக்கிய இராச்சியத்தில் ஏடு அமைப்பின் நிகழ்வுகள்...















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏட்டு நிறுவனம்



வெள்ளை உடை அணிந்து
கொள்ளை இச்சையுடன்
பள்ளி செல்லும்
சிறார்கள் எம்
வாழ்வு சிறக்கவென
அள்ளி உதவி செய்யும்
நல்லதொரு நிறுவனம் தான்
எம் இனிய ஏட்டு நிறுவனம்.

கரையிலா
கல்விதனை
கஸ்ரமின்றி தொடரவென
உதவிக்கரம் நீட்டுகின்ற
கல்வி நிறுவனமே
காலமெல்லாம் நீ வாழ்க!

ஞா.கலானி

# ஏட்டு நிறுவனமே!

ஏடு நிறுவனமாம்
ஏழைகளுக்கு உதவிடுமாம்
அதன் கரம் பிடித்த - நாம்
கல்வியால் சிறந்து விளங்குகின்றோம்
சோரும் எம்மை தட்டி எழுப்பும்
ஏடு நிறுவனமே!
நல்லறிவு புகட்டும்
ஆசானே!
"நகமும் தசையும் போல்"- எம்மை
அரவணைக்கும் தந்தையே!
எம்மைக் கைவிடாமல்
வழி நடத்தும் அன்புக்கரமே!
காலமெல்லாம் வழிநடத்தி அழைத்துச் செல்லும்
கரக்கடவுளே!
ஏடு நிறுவனமே பல்லாண்டு காலம்
யாவருக்கும் உதவி செய்க!



சி.காவியா,
தரம்-7A,
கிளி / பூநகரி மத்திய கல்லூரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏட்டு நிறுவனம்

ஏட்டுக் கல்விதனை
ஏழைகளும் தொடரவென
ஏணிபோல்
எமை வளர்த்துவிட்ட
ஏட்டு நிறுவனமே
என்னுடைய வணக்கங்கள்.

என்றுமே அழிந்திடாத
ஈடில்லா கல்விதனை
இலகுவில் பெற்றுவிட
இங்கிதமாய் உதவி செய்யும்
இனியதொரு நிறுவனம் தான்
எமக்கினிய ஏட்டு நிறுவனம்.

கற்றல் உபகரணங்களும்
களிப்புடனே எமக்களித்து
கவின்யூட்டும் கல்விதனை
கணப்பொழுதில் நாம் பெற்றுவிட
களம் அமைத்துத் தந்துவிடும்
நல்லதொரு நிறுவனம் தான்
கனிவான ஏட்டுநிறுவனம்.

கல்வி நிறுவனமே
பல காலம் வாழ்ந்திடுவாய்
எம்மைப் போல் சிறார்களுக்கும்
மென்மேலும் உதவிடுவாய்
வாழ்க என்றும் வளமுடனே
வாழிய ஏட்டு நிறுவனமே.



உ.கவி



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பத்தாவது ஆண்டில் ஏடு...

**திரு.வே.செல்வகுமார்,**
அதிபர்,
கிளி/தர்மக்கேணி அ.த.க.பாடசாலை,
தர்மக்கேணி,பளை.

ஏடு அமைப்பு 10 ஆவது ஆண்டில் கால்பதிக்கும் நிகழ்வையொட்டி நூலுருவாக்கத்திற்கு ஆசிச் செய்தி வழங்குவதில் அகமகிழ் வடைகின்றேன்.

"எழுத்தறிவிப்போம்
ஏக்கம் தவிர்ப்போம்
வளமான வாழ்வளிப்போம்"

எனும் தாரக மந்திரத்திற்கமைய இவ்வமைப்பு வழங்கி வரும் தன்னலமற்ற சேவையானது ஆதரவற்ற மாணவர்களின் கல்வி வளர்ச்சியினைப் பொறுத்தமட்டில் ஒப்பற்ற ஓர் வரப்பிரசாதம்.

பல தசாப்தகால யுத்த அனர்த்தங்களின் மத்தியிலும், பல இடப்பெயர்வு களுக்குப் பின் 2010 .இல் தமது சொந்த இடங் களில் மக்கள் குடியமர்ந்த வேளை தாய், தந்தையரை இழந்த எம் சிறுவர்களின் கற்றல் மேம்பாட்டினை இலக்காகக் கொண்டு சிறப்புடன் செயற்பட்டுக் கொண்டிருக்கும் ஏடு அமைப்பே! சீரோங்கும் உன் சேவையை எடுத்தியம்ப வார்த்தைகளே இல்லை.

கல்வி எனும் அழியாச் செல்வத்தை எம் வலயத்தில் உள்ள ஏழைச் சிறார்கள் பெற்று அனுபவிக்கும்படி நீ வழங்கும் மாதாந்த உதவி மற்றும் தேவையறிந்து தந்துதவும் கற்றல் உபகரணங்கள், துவிச்சக்கர வண்டிகள், கற்றல் மேம்பாட்டுப் பொருட்கள் அனைத்தும் அவர்களின் வாழ்வை வளம்பெறச் செய்யட்டும். மேலும் எமது மாவட்டம் தவிர்ந்த வட புலத்தில் உள்ள பல மாவட்டங்களிலும் ஆற்றிவரும் போற்றுதற்குரிய அளப்பரிய பணிகளும் வளர்ந்து பெருகட்டும்.

இவ் அமைப்பிற்குப் பலம் சேர்க்கும் எம் புலம்பெயர் உறவுகளின் முன்மாதி யான இப்பணி கழக ஆர்வலர்களை விழிப்படையச் செய்ய வேண்டும். வலிமைமிக்க ஓர் சேவை அமைப்பாக முனைப்புடன் செயற்பட வழி வகுக்கட்டும். உலகின் மூலை முடுக்கெல்லாம் கிளைவிட்டு வளரட்டும்.

ஏடு அமைப்பின் நூல் வெளியீட்டிற்கு ஆசிச் செய்தி வழங்குவதிலும், இவ் அமைப்பிற்கு ஆதரவாகச் செயற்படும் எமது புலம்பெயர். உறவுகளை மனதார வாழ்த்துவதிலும், எமது பள்ளிச் சிறார்களுடன் இணைந்து கூறுவதில் அகமகிழ் வடை கின்றேன். ஆதரவற்ற எம் சிறார்கள் அனாதைகள் அல்லவென்று அவர்களுக்கு அன்புக் கரம் நீட்டும் ஏடு அமைப்பே உன் சேவை ஒளிரட்டும்.

வாழ்க உன் பணி வளர்க! நின் புகழ்
நூலுருவாக்கத்திற்கு எனது ஆசிகள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏட்டு நிறுவனம்




ஏட்டுக் கல்விதனை
என்றுமே பெற்றுவிட
எமக்கு என்றும் உதவி செய்யும்
ஏட்டு நிறுவனமே
எனதினிய நன்றிகள்

ஏணிபோல் ஏற்றிவிட
என்றுமே உழைத்துவிடும்
இனியதொரு
நிறுவனம் தான்
எல்லையில்லாத
ஏட்டு நிறுவனம்

சின்னஞ்சிறார் எமக்கு
ஏராளம் உதவிகளை
அள்ளி வழங்கி விடும்
அழிவில்லா நிறுவனமே
வாழ்க என்றும் வளமுடனே.









S.சுதர்சன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐக்கிய இராச்சியத்தில் ஏடு அமைப்பின் நிகழ்வுகள்...







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நம்மை காக்க வந்த உறவு

கல்லூரி நாட்களில் முகமறியா
மனிதரினுள் ஒன்றென வந்த - ஏடே
ஓராயிரம் நன்றிகள் எனக்குள்
உன்னை நினைக்கையில்
வார்த்தை என்ற தூரிகை எடுத்து
வரைய முனைகின்றேன்.

ஜனனத்தில் தோன்றாத
உறவு - ஆனால்
கல்வியில் தோள் தரும் உறவு
வறுமையில் வரம் தரும் உறவு
வாழ்க்கையை வளமாக்கும் உறவே- ஏடு

வறுமையிலும் வெறுமையிலும்- அது
தோள் கொடுத்து தோழமை தரும்
கல்வியிலும் வாழ்விலும் நம்மை
காக்க வந்த உறவே ஏடு!

ஈரைந்து மாதங்கள் வயிற்றில் சுமந்து
வாழவைப்பாள் அன்னை - ஏடு
அதை மிஞ்சி
காலமெல்லாம் தோளில் சுமந்து
துணை நிற்பாள் ஏட்டுத்தாய்.

ஈழ நாட்டின் நாலா புற
கல்வி மாணவர்களையும்
ஈன்றெடுத்து
பத்து ஆண்டுகளாக பயில்வதனை
தொடரச் செய்து
பத்தாவது ஆண்டினையும்
ஈடு செய்திடும் இலவச
கருவறைதான் ஏடு.

நானிலம் போற்றி நிற்க
நாவில் வரும் வார்த்தைகளை
பாமாலையாக வரைந்து வைக்க
பாடுவோம் வாழ்த்துவோம் உன்னதமான
உயர்ந்த ஏட்டு நிறுவன இரத்தினங்களை!

நீ படைக்கப்பட்ட நாள் முதல்
இன்றைய நாள் வரையில்
உன் பணிகரம் ஓயவில்லை
உன் நிறமும் மாறவில்லை
உன் காலடியை நாடி வரும்
மானிடர்களும் குறையவில்லை
ஏடு எனும் பெயர் கொண்டு
நீ செய்த உதவியினை
அண்டம் என்றும் மறக்காது ஏடே!

பாலர் வகுப்பிலிருந்து பட்டப்படிப்புவரை
நான் செல்ல உதவியளித்த ஏடே
பட்டங்கள் பல பெற, பல்கலைக்கழக
படிக்கட்டெல்லாம்
பயம் நீக்கி ஏற வைத்த - ஏடே
பத்தாண்டென்ன பல்லாயிரம் ஆண்டுகளும்
உன் பணி தொடர வாழ்த்துகின்றேன்.

ம.கல்பனா,
கிளி/பூநகரி மத்திய கல்லூரி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏட்டின் பணி....

**திருமதி.வி.சுரேஷ்,**
நன்னடத்தை உத்தியோகத்தர்,
கரைச்சி கிளிநொச்சி.

"எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவான்" எனும் முதுமொழிக்கு அமைவாகக் கற்றலில் ஆர்வமுள்ள வறுமைக்குள்ளாக்கப்பட்ட சிறுவர் சிறுமிகளின் கற்றல் விருத்தியை உண்டு பண்ணும் நோக்கில் உருவாக்கப்பட்ட இந்த அமைப்பானது செய்கின்ற உதவி நேற்று முளைத்த காளான் போல் அல்லாது பத்து வருட கால சேவையை வழங்கி வருகின்றது.

கருணை உள்ளம் கொண்ட புலம்பெயர் எமது உறவுகளால் வழங்கப்படுகின்ற உதவியால் போர்ச்சூழலின் பின்னான மீளக் குடியமர்வில் மக்கள் தங்கள் பிள்ளைகளின் கல்வியை மேம்படுத்த முடிகின்றது.

சிறுவர் இல்ல அனுமதி கோரி வருகின்ற பிள்ளைகளிற்கும் இப்பொருளாதார உதவியால் தமது குடும்பச் சூழலிலேயே தங்கியிருந்து கல்வி கற்கவும் அவர்களின் இளமைப்பருவத்தை மகிழ்ச் சியாகவும் பாதுகாப்பாகவும் பெறுவதற்கு இந்நிறுவனம் உதவு கின்றது. மேலும் இதன் பணி விரிவடைந்து தனது சேவையை வழங்குவதற்கும் தொடர்வதற்கும் இறைவனை வேண்டி நிறைவு செய்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏடு

ஏடெடுத்து நான் கல்விபயில
ஏடே உன் பேருதவி
ஏழைகளாம் எம்மை - கல்வியில்
ஏணி போல் உயர்த்திடுமாம்.

கண்கண்ட தெய்வங்களை
காலனவன் கொன்றாலும்
கல்வி, கலையில் நாமுயர நீ செய்யும்
கனிவான பேருதவியாம்.

மாத மாதம் உன் உதவி
மாணவர்களாம் எம்மை
மாண்புடன் கல்வி பயில
மகிழ்ச்சியூட்டும் உதவியாம்.

தொலைதூரம் சென்றாலும்
தொலைந்து விடாத நட்பைப் போல்
தொலைவில் இருந்து நீ செய்யும் - பல
தொகை மாணவர்க்கான உதவியாம்.

வருடத்தில் பல தடவை- உன்
உதவியாளர்களின் சந்திப்பு எமக்கு
வாசல் கதவை வசந்தக்காற்றுத் தட்டுவதைப்
போன்று
கல்வியில் மேலும் விழிப்புணர்வை
ஏற்படுத்துதாம்.

காலங்கள் பல சென்றாலும்
மறந்திட முடியா உன் உதவிக்கு
காணிக்கையாக நிச்சயம்
கல்வியில் நாமுயர்வோம்.

விநாயமூர்த்தி சிந்தாதேவி,
தரம் -12(கலைப்பிரிவு),
கிளி/கறுக்காய்த் தீவு மகாவித்தியாலயம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருகோணமலையில் ஏடு...

**கு. சரவணபவன்,**
ஏடு, திருகோணமலை.

*அன்னையாவினும் புண்ணியம் கோடி ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்*

*- பாரதி*

ஐக்கிய இராச்சியத்தில் இருந்து இயங்கிவரும் ஏடு அமைப்பானது தனது பத்தாவது வருட பூர்த்தியை மிக வெற்றி கரமாக அடைந்தமையையிட்டு அக மகிழ்கின்றேன். ஈழத்தில் வடகிழக்கில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களின் பிள்ளைகளதுகல்வி வளர்ச்சிக்காக 2009 ஆம் ஆண்டிலிருந்து ஏடு அமைப்பானது தொடர்ச்சியாக இயங்கி வருவதானது எமது தமிழ் சமுதாயத்தின் எதிர்கால அபிவிருத்திக்கு மிகப்பெரும் உந்துதலை அளத்துள்ளது.

ஈழத்தமிழர்கள் தமது உரிமை மீட்பு போராட்டத்தில் தமது சொத்துக்களைஇ நிலங்களை, வளங்களை, பெறு மதியான உயிர்களை நம் மத்தியில் இருந்த பெரும் ஆளுமைகளை இழந்த போதிலும் நாங்கள் எங்கள் ஊக்கத்தையும்இ முயற்சியையும் இதுவரையில் கைவிடவில்லை. இதனடிப்படையிலே எமது கல்வியை முன்னோக்கி கொண்டு செல்கின்றோம்.

இழப்புகளில் இருந்து உயிர்த்தெழும் தேசம் தன் எதிர்காலத்தை கல்வியின் மூலமாக உறுதி செய்வதோடு ஏடு அமைப்பு ஆற்றும் பணி அளிவில் பெரியது. ஏடு அமைப்பானது தொடர்ந்து எமது மக்களுக்காக இயங்க வேண்டும். வடகிழக் கில் பாதிக்கப்பட்ட எமது மாணவர்களுக்கான மகத் தான பணியை தொடர்ந்து முன்னோக்கி செல்ல வேண்டும் என் பது எனது பேரவா. ஏடு அமைப்பின் நீண்ட பயணத்திற்கு என் மனம் நிறைந்த வாழ்த்துக்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஏடு அமைப்பின் ஒன்றுகூடல் நிகழ்வுகள் அம்பாறை, திருகோணமலை...











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏடு அமைப்பின் ஒன்றுகூடல் நிகழ்வுகள் மன்னார். கிளிநொச்சியில் - 2016


























Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஏடு அமைப்பின் ஒன்றுகூடல் நிகழ்வுகள் திருகோணமலை, அம்பாறையில் - 2016


















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஏடு அமைப்பின் ஒன்றுகூடல் நிகழ்வுகள் மன்னார் - 2017


























Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிட்டுக்கள் எங்களின் ஏட்டுத் தாயே!

சிட்டுக்கள் எங்களின் சிறிய தேசத்தில்
மொட்டுக்கள் மலர்ந்து மலர்கள் சிரித்திட
கல்வியே சொத்தென கற்கின்ற எமக்கு
கை கொடுத்துவிடும் எங்கள் ஏட்டுத் தாயே

ஏடு எனும் நாமம் கொண்டு
ஏழை எம்மை வாழ வைக்கும் - நல்
எண்ணம் கொண்டு
ஏணியாய் தாம் மாறி - எம்மை
ஏற்றிவிடும் அன்னையே நீ வாழ்க!

பத்து ஆண்டுகளே ஆனாலும் - உன் சேவை
தொடங்கி பல்லாயிரம் நன்மைகள் எமக்கு
தீப ஒளியாய் திருமுகம் காட்டி - எம்
தேவைகளைப் பூர்த்தி செய்யும்
தேவியே நீ வாழ்க!

பாரினிலே நான் வளர்ந்து பரப்பிடுவேன்
உன் புகழை
பார் போற்றும் உத்தமியே
என்றென்றும் நீ வாழ்க! நீ வளர்க!
என்று கூறி விடை பெறுகின்றேன்

சந்திரகுமார் கபிலன்,
தரம் -4A
கிளி/கோணாவில் காந்தி
ஆரம்ப வித்தியாலயம்,
கோணாவில், கிளிநொச்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏழைச் சிறுவர்களின் மனதில் இடம் பிடித்தவனே!

கல்வி ஒழுக்கம் பண்புதனைக் கற்று
உயர்ந்த ஆசானே!

ஏடு எனும் நாமம் பெற்று
ஏழை சிறுவர்களின் மனதில் இடம் பிடித்தவனே!

ஏழைச் சிறுவர்களுக்கு நீர் செய்யும் உதவியால்
எம் எதிர்காலத்தை உறுதி செய்கின்றாய்.

உயர உயர நாம் சென்று
உலகில் நிமிர வழி செய்யும் ஏடு நிறுவனமே!

உம் நிறுவனத்தில் பணியாற்றும் அறிவு ஜீவிகளின்
அரும்பணியை எம் ஆயுள் உள்ளவரை என்றும் மறந்திடோம்.

எம் உயிர் ஒரு துளி உள்ளவரை
உமை வாழ்த்தி வணங்கிடுவோம்.

ஜெகதீஸ்வரன் அபிசாளினி.
தரம் -5B
கிளி/கோணாவில் காந்தி
ஆரம்ப வித்தியாலயம்,
கோணாவில், கிளிநொச்சி..

# வாழ்த்துகின்றோம் இந்நாளில்

ஆரம்பக் கல்வியைக் கற்பதற்கு அவதியுறும் வேளையில்
நேசக் கரம் நீட்டி உதவிய ஏடு நிறுவனமே!
வாழ்க! வளர்க!

தந்தையைப் பறிகொடுத்து தடுமாறும் தருணத்தில்
இருகரம் நீட்டி இன்றுவரை உதவிடும்
ஏடு நிறுவனமே வாழ்க! வளர்க!

எம் கல்வி அழியாது! ஒழியாது எல்லையற்று சிறப்பதற்கு
எம்மை அணைத்தெடுத்த ஏடு நிறுவனமே
வாழ்க! வளர்க!

உம் பணி ஓங்க எம் பணி சிறக்க
உமை வாழ்த்துகின்றோம் இந்நாளில்.

பாஸ்கரன் சயந்தினி.
தரம் -4B
கிளி/கோணாவில் காந்தி
ஆரம்ப வித்தியாலயம்,
கோணாவில், கிளிநொச்சி..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர்களின் கற்றலுக்கு உதவும் ஏடு...

**த.பேரின்பராசா,**
உ.க.ப (மு.சா.க)
வலயக்கல்வி அலுவலகம்,
கிளிநொச்சி.

ஏடு அமைப்பானது 2010 ஆம் ஆண்டு ஆரம்பிக் கப்பட்டு போர் அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டு தாய், தந்தை யரை இழந்த பிள்ளைகள் மற்றும் உடல் உபாதைளுக்கு உட்பட்டு இயங்கமுடியாத நிலையிலுள்ள பெற்றோரின் பிள் ளைகள் ஆகியோரின் கல்விச்செயற்பாடுகளை மேம்படுத் துவதற்கு நிதி மற்றும் கற்றல் உபகரண வசதிகளையும் அவர்க ளின் போக்குவரத்திற்கான துவிச்சக்கர வண்டி வசதிகளையும் வழங்கி வருவதுடன் தேவையானபோது அவ்வாறன சில குடும் பங்களின் வாழ்க்கை நிலைமையை ஆராய்ந்து பொருத்தமான வாழ்வாதார வசதிகளையும் வழங்கி வருகின்றது.

அதுமட்டுமன்றி அவ்வாறான மாணவர்கள் பல்கலைக் கழகங்களுக்குத் தெரிவாகும் போது உயர்கல்விக்கான உதவிக ளையும் வழங்கி அவர்களின் கல்விச்செயற்பாடுகளுக்கு ஊக்கம ளித்து வருகின்றமை பெருமைக்குரிய விடயமாகும். ஏடு அமைப் பானது தனது உதவிகளை வருடா வருடம் அதிகரித்து வருவது பாராட்டுதற்குரியதாகும். இவ்வமைப்பானது முயற்சி தொடர்ச்சி உயர்ச்சி என்பதற்கிணங்க படிப்படியாக வளர்ந்து 10 வருடங்கள் திட்டமிட்ட செயற்பாடுகளை நிறைவாக்கி 11 ஆவது ஆண்டில் காலடி எடுத்து வைத்திருப்பது எல்லோராலும் பாராட்டப்பட வேண்டிய முக்கியமான அம்சமாகும். ஏடு அமைப்பு மேலும் மேலும் வளர்ச்சியடைந்து ஆதாரவற்ற பிள்ளைகளின் கல்வியும் வாழ்வும் மேன்மையடைய சிறப்பாகத் தனது பணியைத் தொடர நல்லாசிகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஏடு நிறுவனமும் அதன் பயன்களும்

A.கஷ்மிதா,
மன்/சித்திவிநாயகர்
இந்துக் கல்லூரி.
மன்னார்.

நவீன காலத்தில் மக்களுக்குப் பல தேவைகள் உருவாகின்றன. இத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் பொருட்டு மக்கள் பல நிறுவனங்களின் உதவியை நாடுகின்றனர். மாணவர்களின் கல்வித் தேவையைப் பூர்த்தி செய்யும் பொருட்டு ஏடு நிறுவனம் உருவாக்கப்பட்டுள்ளது. இந்த நிறுவனத்தால் மாணவர்கள் பல பயன்களைப் பெறுகின்றனர். ஏடு நிறுவனமானது அனைவரையும் சமனாக மதித்து உதவுகிறது.

ஏடு நிறுவனம் என்பது கல்வி கற்கும் மாணவர்களின் தேவையைப் பூர்த்தி செய்து அவர்களுக்கு பல உதவிகளை வழங்கும் நிறுவனம் ஆகும். இந்நிறுவனத்தில் பல பலர் சேவை புரிகின்றனர். பாடசாலையில் சில மாணவர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களுக்கு ஊக்கம் அளித்து பல உதவிகளை வழங்கி கல்வியில் முன்னேறுவதற்கு வழிவகுக்கின்றனர்.

ஏடு நிறுவனத்திலிருந்தும் வெளிநாடுகளிலிருந்தும் பல நலன்விரும்பிகள் வருகை தந்து மாணவர்களை ஊக்கமளிக்கும் முகமாக பல போட்டிகள் மற்றும் தேர்வுகளை நடாத்திக் கூட்டங்கள் இடம்பெறும் பொழுது தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்குப் பரிசில்கள் வழங்கப்படும்.

ஏடு நிறுவனத்தால் மாணவர்கள் பல பயன்களைப் பெறுகின்றனர். அவ்வாறான நிறுவனங்களை நாம் பேணிப் பாதுகாப்பது எமது முக்கிய கடமைகளில் ஒன்றாகும். இதனால் மாணவர்கள் பல நன்மைகளைப் பெறுகின்றனர். தங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்கின்றனர். ஒவ்வொரு பிரிவாகப் பிரித்து படிப்படியாக மாணவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்கின்றனர். எழுத்தறிவிப்போம், ஏக்கம் தவிர்ப்போம், வளமான வாழ்பளிப்போம் என்ற கொள்கையைக் கொண்டு இந்நிறுவனம் செயற்படுகிறது. மாணவர்களை ஊக்குவித்து நல்ல ஒரு பிரஜையாக உருவாக்குவதே இதன் நோக்கமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமரர் ஆறுமுகநாதன் வீரசிங்கம் அவர்களின் சிரார்த்ததின நிகழ்வு - 2018
## கிளி/ ஐயனார்புரம் அ.த.க.பாடசாலையில் கற்றல்வள நிலையம் திறப்பு விழா...















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆன்ஷஜானிக்கா
யோசுதாசன்டிமல்

# ஏடு நிறுவனத்தின் அறப்பணிகள்!

"அன்ன சத்திரம் ஆயிரம்
வைத்தல், ஆலயம் பதினாயிரம்
நாட்டல், பின்னருள்ள
தருமங்கள் யாவும் பெயர்
விளங்கி ஒளிர நிறுத்தல்,
அன்னயாவினும் புண்ணியம்
கோடி ஆங்கோர் ஏழைக்கு
எழுத்தறிவித்தல்" என்ற
பாரதியின் வார்த்தைகளுக்கேற்ப
ஏழை மாணவர்களின்
கல்விக்காக நிறைந்த
சேவையாற்றி வரும் ஏடு
நிறுவனம் எங்கள் இதயங்களில்
என்றுமே அழியாத நன்றிக்குரிய
நன்மதிப்பைப் பெற்றுள்ளது.

ஏடு என்ற இனிய தமிழ்ப்
பெயரே இந்த அமைப்பின்
எண்ணத்தை எடுத்து
இயம்பி விடுகிறது.

மனித குலம் தனது
வாழ்க்கைத் தேவைக்காக
இயற்கையுடன் நடத்திய
போராட்டத்தினூடாக
சேகரித்துள்ள அறிவுச்
செல்வங்கள் ஏராளம் எண்ணும்
எழுத்துமாகக் கொட்டிக் கிடக்கும்
அறிவுச் சாகரத்தின்
நுழைவாயில் கல்வி
ஒரு இனம் அதுவும்
உரிமை மறுக்கப்பட்ட
இனம் தனது இருப்பை
தக்க வைத்துக் கொள்வதற்கு
கல்வியும் பொருளாதாரமும்
இன்றியமையாதவை
அந்தக் கல்வியை
எம்மைப் போன்ற மாணவர்கள்
பெற்றுக் கொள்வதற்கு
பொருளாதாரம் தடையாகிவிடக்கூடாது
என்பதற்காக புலம்பெயர்
தேசங்களில் ஒவ்வாத கால நிலையில்

ஊண் உறக்கமில்லாமல்
உழைத்த பணத்தை எமது
தேசத்துக் குழந்தைகளுக்காகப்
அர்ப்பணிக்கும் உன்னத
கொடையாளர்களும்

அவற்றை ஒருங்கிணைத்து
உரியவர்களுக்கு உண்மையாய்
நேர்மையாய் பகிர்ந்தளிக்கும்
தாயக தர்மர்களும்
வணக்கத்திற்குரியவர்களே!

"வறுமையில் இருக்கும்
ஒருவனுக்கு உண்ணுவதற்கு
மீனைக் கொடுப்பதைவிட
அவனுக்கு மீன் பிடிக்கக்
கற்றுக்கொடு" என்று
சொல்கிறது ஒரு சீன
பழமொழி" அதே போன்றுதான்
ஏழை மாணவர்களுக்கு
உணவளிப்பதை விடவும்
அவர்கள் எதிர்காலத்தில்
சமூகத்தில் நல்ல
தொழிலைப் பெற்று
தம்மை சிரமங்களுக்கு மத்தியிலும்

வளர்த்த பெற்றோருக்கும்
சமூகத்திற்கும் பணியாற்ற
அவர்களுக்கான கல்வியை
வழங்குவதே சிறந்தது
என்பதை நன்குணர்ந்து
ஏடு அமைப்பினர்
கல்விச் சேவையினை
தமது பிரதான சேவையாக
ஆற்றி வருகின்றனர்

மூன்று இனத்தவர்களும் பல மாதங்களைப்
பின்பற்றுபவர்களும் வாழும்
மன்னார் மாவட்டத்தில்
இன மத பேதங்களைக் கடந்து சேவையாற்றும்
ஏடு நிறுவனம் சரியானவர்களைத் தேடி
சேவை செய்து வருகிறது
நீங்கள் எமக்களிக்கும் கல்வி காலத்தால்
அழியாது என்பதனால்
இந்தக் கொடை அமைப்பின்
பெயரும் காலத்தால்
அழியாது. தங்கள் சேவைக்கு
நன்றி கூறி வாழ்த்துவதற்கு
எனக்கு வயதில்லை வாழ்ந்து காட்டுகிறோம்
வழி தவறாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

க.பிரியங்கா,
கிளிபூநகரி ம.கல்லூரி.

## உன் பணி வந்த நாள் முதல் என் வாழ்வில் துளிர்வு....

பள்ளி எனும் நாட்களில்
முகமறியா மனிதருள்
பலருடனும் பழகி வந்த ஏடே
உன்னை எண்ணிப் பார்க்கையில்
என் மனதில் எழுகிறது கவிதை
உன்னை நினைத்துக் கொண்டே
வரைகின்றேன் என்தாளில்.

நான் வறுமை என்று பாராது
என்னை உன் பிள்ளை போல் நினைத்து
என்னை வளர்த்தெடுத்த செல்வமே
கல்வியிலும் வாழ்விலும் உயர்வு பெற செய்த
ஏணி எனும் ஏடே.

சிறு வயது துளிரில் இருந்து
என்னை வளர்த்தெடுத்த ஏடே
பாலப் படிப்பில் இருந்து
கல்லூரி முதல் அடியெடுக்க வைக்கும் தாயே
பட்டங்கள் பலவும் பெற என்னை
உயர்த்துகின்ற ஏடே
உன் பணி வந்த நாள்முதல்
என் வாழ்வில் துளிர்வு
உன் பணி தொடர வாழ்த்துகின்றேன்
நாம் இங்கு
உன் காலடி நாடி வரும்
மாணவச் செல்வங்கள் நாமே
நீ செய்த நன்றியினை
மனதார வாழ்த்துகின்றோம்.

## ஏட்டு நிறுவனம்

சோதனைகள் பல கடந்தாலும்
வேதனைகள் பல தொடர்ந்தாலும்
சாதனை படைக்கத் துடிக்கும்- எமை
ஏற்றி வைத்த ஏணிப்படியே- நீ
தந்தது பணத்தை மட்டுமல்ல
பற்றி எரியும் தீயிலும் வெற்றி
கொள்ளும் நற்திறமையும் தான்.
ஏடு என்ற சொல்லின் பல பொருளும்
உன்னில் உண்டு உம் உன்னத
பணி தனிலே எம் உயிர்நாடி உண்டு
கரம் கூப்பி வணங்குகின்றேன் ஏடே
ஏட்டு நிறுவனமே நீ தந்த தயவினில்
உன் நிஜமான எதிர்காலம் நிலவாக மிளிரும்
பெற்றோரை இழந்த எங்களுக்கு - நீயே
உலகம் நீயே உம் உயிர் மூச்சு
காலங்கள் பல கடந்தாலும்- உனை
மறவேன் கனிவான ஏட்டு நிறுவனமே!
உன் துணிவான நெடுப்பயணம் தடையின்றி
தொடர இறைவனைப் பிரார்த்திக்கிறேன்
உன் காவியத்தை எழுதிடவே
கவியொன்று போதாது காகிதமும் போதாது
இத்தனை காலமும் எனக்காக உழைத்த
என் ஏட்டு நிறுவனமே உங்களுக்கு
என் மனமார்ந்த நன்றிகள்!


க.பிரியங்கா,
தரம்- 11
கிளி/பூநகரி ம.கல்லூரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அமரர் ஆறுமுகநாதன் வீரசிங்கம் அவர்களின் சிரார்த்ததினம்**
**கிளி/இராமகிருஸ்ண வித்தியாலயத்தில்...**



















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏடு அமைப்பின் ஒன்றுகூடல் நிகழ்வு - அம்பாறை
துவிச்சக்கரவண்டி, வாழ்வாதார உதவித்திட்டங்கள் வழங்கல் - பரந்தனில்...



























Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









# ஏட்டு நிறுவனம்

உன்னதமான உலகில் உருவற்று
இருந்த எமக்கு
உருவம் தந்த அழகிய கடவுளே
ஏட்டு நிறுவனமே
வெளி உலகிற்கு எமை வெளிக்காட்டிய
வெளிச்சம் நீ
நீ அணைந்தால் இவ்வுலகில்
நான் இல்லை
மார் தட்டி சொல்கிறேன்- நான்
உன் பிள்ளை
அஞ்சி அஞ்சி வாழ்ந்த - எமக்கு
அஞ்சாமை தீபம்
கண்ணை இமை காப்பது போல
என்னைக் காக்கிறாய்
கத்தி அழுதபோது கச்சிதமாய்
அணைத்த அன்னையே
பசியென்று வந்த எமை பட்டினியில்
விட்டுவிடாமல்
பாசமாய் பற்றிய ஏட்டு நிறுவனமே
நாம் உலகை
வலம் வர உணர்வு பூர்வமாய்
உழைக்கின்றாய்
உனை எப்போதும் மறவேன்
வெற்றி தோல்விகளோ:
இலக்குத் தனை எய்திட நாம் போராடிய
தருணத்தில்
எம்மோடு போராடிய ஏட்டு நிறுவனமே
ஏழேழு ஜென்மம்
எழுத்தாலும் நீ என் உயிர் மூச்சு
நன்றிகள் உனக்காக!

சி.தமிழ் நிலா
தரம்- 07
கிளிபூநகரி மத்திய கல்லூரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மா.யேசுதாசன்**
தரவன்கோட்டை,
மன்னார்.
04.012.2018

**பிரம்மஸ்ரீ மனோ ஐங்கரசர்மா,**
தலைவர்,
ஏடு நிறுவனம்,
மன்னார்

கனம்!
மாண்புமிகு தலைவர் அவர்களுக்கு!

எனதுமகள் யேசுதாசன் சயனிஷா என்பவருக்கு உங்களது நிறுவனத்தினால் கல்விக்குக் கிடைக்கும் பணம் பெரும் உதவியாக இருக்கின்றது. இதையிட்டு நாங்கள் உங்களுக்கும், உங்கள் நிறுவகத்திற்கும் எங்கள் குடும்பம்சார்ந்த மகிழ்ச்சியையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கின்றோம். அத்தோடு உங்கள் சேவை மேலும் மேலும் வளர இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

"நன்றி"

இப்படிக்கு
உண்மையுள்ள
மா.யேசுதாசன்.

---

**த.தனுஸ்ரிகா,**
தண்ணீர்த்தாங்கி, மணற்குளம்,
மன்னார்.
09.11.2018

**ஏடு நிறுவன,**
அதிகாரி அவர்களுக்கு!

மேற்படி முகவரியில் வசிக்கும் தனிஸ்கரன் தனுஸ்ரிக்கா ஆகிய நான் ஏடு நிறுவனத்தின் ஊடாக இரண்டு வருடங்கள் உதவித்தொகையாக தாங்கள் கொடுக்கும் பணத்தைப் பெற்றுவருகின்றேன். இவ்வுதவியினால் எனது படிப்புக்குத் தேவையான அனைத்து உபகரணங்கள் மற்றும் மேலதிக வகுப்புக்குத் தேவையான பணத்தினையும் கட்டி வருகின்றேன். இவ்வுதவியின் மூலம் எனது படிப்புக்கு எவ்வித இடஞ்சலும் இன்றி நன்றாகப் படித்து நல்ல புள்ளிகளைப் பெற்றுவருகின்றேன். எனவே எனது படிப்புக்காலம் முடியும்வரை இவ்வுதவியை செய்யுமாறு மிகவும் பணிவன்புடன் கேட்டு நிற்கின்றேன்.

நன்றி

இப்படிக்கு,
உண்மையுள்ள மாணவி
த.தனுஸ்ரிகா

---



**பா.நிகேஸ்,**
செல்வநகர்,
எழுத்தூர்.
10.12.2018

**ஏடு நிறுவனம் மன்னார்**

பாலகிருஸ்ணன் நிகேஸ் ஆகிய நான் ஏடு நிறுவனத்திற்கு அறியத்தருவது, என்னவென்றால் எனக்கு மாதாந்தம் தரும் ரூபாய் 2000.00 தரும் உதவிப்பணத்தில் சப்பாத்து, கொப்பி, புத்தகப் பைகள் வேண்ட உதவியதற்கு இன்னும் பிற வகுப்புக்களுக்கும் செல்வதற்கு முதல் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். என்னைப் போல் அப்பா இல்லாதவர்களுக்கு உதவி செய்ய வேண்டுமென்று மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றேன்.

இப்படிக்கு,
உண்மையுள்ள மாணவன்
நிகேஸ்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஏடு நிறுவனத்தின் ஒன்று கூடல் நிகழ்வு - 2018
## அமரர் ஆறுமுகநாதன் வீரசிங்கம் அவர்களின் சிரார்த்ததின நிகழ்வு...










முல்லைத்தீவு ஏடு நிர்வாகம்














Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏட்டின் சேவை தொடர...

**ப.சசிதரன்**
பிரதி அதிபர்,
கிளி/முருகானந்தா கல்லூரி.

எமது தேசத்தின் உறவுகளின் கூட்டு முயற்சியின் பயனாக பிரித்தானியாவை தலைமையாகக்கொண்டு இலங்கையில் இயங்கும் ஏடு நிறுவனத்திற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன். எந்தவித வேதனமும் இல்லாது தொண்டு அடிப்படையில் ஒரு நிர்வாக கட்டுக்கோப்புடன் கிளிநொச்சியை மையமாகக் கொண்டு அம்பாறை, முல்லைத்தீவு, திருகோணமலை ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த போரினால் பாதிக்கப்பட்ட தந்தையை தாயை இழந்த மாணவர்களை இனங்கண்டு கற்றல் செயற்பாட்டுக்காக சிறு தொகைப் பணத்தினை அவர்களின் வங்கிக் கணக்கில் வைப்பிலிட்டு அவர்களின் கற்றல் தேவையை நிவர்த்தி செய்து வருகிறது.

இது மட்டுமல்லாது மாணவர்களுக்கு துவிச்சக்கர வண்டிகள் வழங்குதல் தரம் - 5 புலமைப்பரிசில் மாணவர்களுக்கு பத்தகங்கள் வழங்குதல், கற்றல், உபகரணங்கள் வழங்குதல் பாடசாலைகளுக்குத் தளபாடங்கள், புத்தகங்கள் என்பன இந் நிலையத்தினூடாக வழங்கப்பட்டு வருகின்றது என்பது பெருமைக்குரிய விடயமாக அமைவதுடன் பல்கலைக்கழக மாணவர்களுக்கும் குறிப்பிட்டதொகை பணம் அவர்களின் கணக்கில் வைப்பிலிடப்பட்டு அவர்களின் தேவையும் நிறைவேற்றப்படுகிறது.

மேலும் இத்திட்டத்தினை விரிவுபடுத்துவதற்காக 2018 ஆம் ஆண்டு முல்லைத்தீவு மாவட்டத்தில் புதிய நிர்வாகக் கட்டமைப்பை உருவாக்கி 30 க்கு மேற்பட்ட மாணவர்களுக்கு உதவி அளித்து வருகிறது. வருடா வருடம் இம்மாணவர்கள் அனைவரையும் ஒன்றிணைத்து பிரித்தானியாவைச் சேர்ந்த நிர்வாகக் குழுவினர் இவர்களை நேரில் சந்தித்து அவர்களின் கற்றல் முன்னேற்றங்களை இனங்கண்டு கொள்வது பெருமைக்குரிய விடயமாகும்.

போரினால் பாதிக்கப்பட்ட வறிய குடும்பங்களை இனங்கண்டு சுயதொழில் முயற்சிக்காக தலா 50000/- ற்கு மேற்பட்ட தொகையினை வழங்கி அவர்களின் தொழில் முயற்சியை மேம்படுத்தி வருகின்றது. இவ் ஏடு நிறுவனம் 10ஆம் ஆண்டில் கால் அடி வைக்கும் போது மேலும் பல மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க இறைவனை வேண்டி எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏட்டின் பணி தமிழர் தாயகம் எங்கும் பரவ...

**திருமதி.ஜெ.தனபாலசிங்கம்,**
அதிபர்,
கிளி/கிளிநொச்சி மகாவித்தியாலயம்,
கிளிநொச்சி.

அறங்கள் பலவற்றிலும் தலையாயது ஏழைக்கு எழுத்தறிவித்த லாகும். துன்பச்சகதியில் மீள வழியற்று ஏங்கி நிற்கும் குடும்பங்க ளுக்கு உறவுக்கரம் நீட்டி பிள்ளைகளின் வாழ்வில் அறிவொளியை ஏற்றி நற்பணிபுரியும் AEDU ( Association for Education Develop ment of Under Privileged) அமைப்பு 2010 இல் ஆரம்பிக்கப்பட்டு அதன் பணியினை வாழ்த்துவதையிட்டு நான் பேருவகையடை கின்றேன்.

இலங்கையின் உள்ளூர்த் தொண்டு நிறுவனமாக இயங்கும் ஏடு அமைப்பு 2010 இல் கிளிநொச்சி வலயக் கல்விப்பணிப்பாளராக இருந்த உயர் திரு. த. குருகுலராஜா அவர்களின் தீர்க்க தரிசனத்தால் உதயமானது. போரில் தாய், தந்தையரை இழந்த பிள்ளைகளின் வளர்ச்சியை நோக்காகக் கொண்டு இயங்கும் இந்நிறுவனம் கற்றல் உதவுதொகையையும், கற்றல் உபகரணங்கள் உள்ளிட்ட வேறு பல உதவிகளையும் வழங்கி வருகின்றது.

இவ் உதவியைப் பெறும் மாணவச் செல்வங்கள் அடுத்து வரும் காலங்களில் அல்லது நீங்கள் சொந்தக்காலில் நிற்கும் போது உங்கள் சகோதரர்களுக்கு உதவ முன்வர வேண்டும் என்பதையும் மனதில் நிறுத்தி பாதிக்கப்பட்டவர்களின் மேம்பாட்டிற்காகக் கால மறிந்து பணிசெய்யும் ஏடு நிறுவனம், மாணவர்களின் உயர்விற்காக என்றும் துணை நிற்க வேண்டுமென உளமார வேண்டுகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


ஏடு நிறுவன ஒன்றுகூடல் நிகழ்வுகள், கிளிநொச்சி - 2011 - 2012

















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஏடு நிறுவன ஒன்றுகூடல் நிகழ்வுகள் கிளிநொச்சி , திருகோணமலை 2013



















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தி.வரதன் SLPS -1
B.B.A Hons, PGDE Merit,
MED Merit, MATE, PGDEM Merit
இணைப்பாளர் - இலங்கை,
அதிபர்,
யா/யூனியன் கல்லூரி,
தெல்லிப்பளை, யாழ்ப்பாணம்.

# கிளிநொச்சியில் உதயமாகியது ஏடு

2010 ஆம் ஆண்டு கிளிநொச்சி மாவட்டத்தில் மீள்குடியேற்றம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் காலப்பகுதி. பாடசாலைகள் மீளவும் ஆரம்பிக்கப்பட்டுக்கொண்டிருந்தன. போர் அனர்த்தங்களால் தாய் தந்தையரை இழந்த பிள்ளைகள் ஏராளம் கற்றலுக்கு இடர்படுகின்ற நேரமது. அக்காலத்தில் வலயக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றிக் கொண்டிருந்த உயர்திரு தம்பிராசா குருகுலராசா அவர்களிடம் 20.07.2010 அன்று இலண்டனிலிருந்து கிளிநொச்சிக்கு வருகைதந்த திரு.பரமசாமி சோமசுந்தரம் (ஈசன்) அவர்கள் மாணவர்களுக்கு உதவி வழங்குவது பற்றி கலந்துரையாடினார். தொடர்ந்து வலயக் கல்வி பணிப்பாளர் என்னை அழைத்து இத்திட்டத்தை நடைமுறைப்படுத்த ஒரு குழுவை அமைப்போம். இதற்காகக் கூட்டம் ஒன்றை ஒழுங்குபடுத்துமாறு தெரிவித்தார். இதன் பின்னர் 28.07.2010 அன்று 3 மணிக்கு கூட்டம் ஒழுங்கு செய்யப்பட்டது. இதற்கு கணக்காளர், வங்கி முகாமையாளர், அதிபர்கள், சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர், கிராம அலுவலர்கள், ஆசிரியர்கள், ஓய்வுநிலை அதிபர்கள் என அனைவரும் அழைக்கப்பட்டிருந்தனர். அன்றைய நாளில் வலயக் கல்விப் பணிப்பாளர் தலைமையில் ஏடு அமைப்பு அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. புதிய ஒரு நிர்வாகக் கட்டமைப்பும் ஏற்படுத்தப்பட்டது. இதில் பதினைந்து பேர் வருகை தந்திருந்தனர். இலண்டன் பிரதிநிதி திரு.ப. சோமசுந்தரம் அவர்களும் வருகை தந்திருந்தார். இவர் ஏடு பற்றிய அறிமுகத்தை வழங்கியிருந்தார். உடனடியாக 9 மாண வர்களுக்கு உதவியை ஆரம்பிக்கலாம் எனத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரிவித்திருந்தார். இதற்காக நிர்வாகம் தெரிவு செய்யப்பட்டது. இதில் தலைவர் திரு.ப ஜெயராசா (கணக்காளர்- கிளிநொச்சி மாவட்ட செயலகம்) செயலாளர் திரு.தி.வரதன் (அதிபர் கிளி/முருகானந்தாக் கல்லூரி) பொருளாளர் திரு.பீ. கௌரிபாலா (முகாமையாளர் - மக்கள் வங்கி) ஆகியோரை உள்ளடக்கி உறுப்பினர்களுடன் நிர்வாகம் ஏற்படுத்தப்பட்டது. இங்கு ஒரு யாப்பு உருவாக்கப்படல் வேண்டும், தனியான வங்கிக் கணக்கு ஆரம்பிக்கப்பட வேண்டும் என்ற கருத்து முன்வைக்கப்பட்டது. அடுத்த கூட்டத்தில் யாப்பு தயாரித்து சபையில் அங்கீகரிக்கப்பட்டு கிளிநொச்சி மக்கள் வங்கிக் கிளையில் வங்கிக் கணக்கும் ஆரம்பிக் கப்பட்டது.

## OUR TEAM IN THE FIELD - KILINOCHCHI DISTRICT



Mr Kurukularajah ( Director of Education) - Centre, Mr. P. J eyarajah (Accountant District Secretariat Kilinochchi), Mr.T. Varathan (Principal-Kili/Murugananda Maha Vidyalayam), Mr. C. Gowripala (Manager-Peoples Bank, Kilinochchi), Mr.Stepan Ranjith (Project Officer, Divisional Secretary Office),Kaddavali, Mrs. J. Manikkavasakar-Principal, Kili/TC Vidyalayam, Mrs.R. J eevaratnam (ISA Officer Kilinochchi Zone) ,Mr. Poologarajah (Principal-Kilinochchi/ Tharmapuram Maha Vidyalayan1)Mr C Vicnarajah(Principal Kilinochchi/Piramanthanaru Maha Vidyalayam), Mr.S.Kanagaratnam(Retd Principal,Kanagapuram) Mr.Y. Kulenthir an(Secretary Piradeshasabai, Karachchi), Mr. E. Kalaichchelvan (Principal, Kili/ Gowtharimunai Vidya, Poonagari, Mr.K Ithyathasivathas (Principal, Kili/ Akkara yan AT K School,M.S Balachandran (Principal Kili/Poonagari Maha Vidyalayam)

கிளிநொச்சி கல்வி வலயத்தை அமைவிடமாகக் கொண்டு வலயக் கல்விப் பணிப்பாளரைக் காப்பாளராகக் கொண்டு ஏடு இயங்க ஆரம்பித்தது. கால ஓட்டத்தில் தன்னைத் தன்னார்வத் தொண்டுநிறுவனமாக கரைச்சி பிரதேச செயலகத்தில் பதிவு செய்து சட்டபூர்வமான அமைப்பாக ஏற்படுத்தப்பட்டது. 2010 இலேயே 26 மாணவர்களுக்கு உதவு தொகை வழங்க ஆரம்பித்தது இவ்வமைப்பு. 2011 இல் 48 மாணவர்களுக்கும் 2012 இல் 100 மாண வர்களுக்கும் 2014 இல் 125 மாணவர்களுக்கும் 2015 இல் 135 மாணவர்களுக்கும் 2016 இல் 150 மாணவர்களுக்கும் 2018 இல் 175 மாணவர்களுமாக உதவிகளை அதிகரித்து வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இதில் முதலில் 1500/= மாதம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதம் வழங்கியும் பின்னர் 2000/- உம் மாதம் மாதம் வழங்கி வருகின்றோம். கிளிநொச்சியில் பளை, கரைச்சி, கண்டாவளை, பூநகரி ஆகிய கோட்டங்களிலும் 30க்கும் மேற்பட்ட பாடசாலை மாணவர்கள் இப்பட்டியலில் உள்ளடக்கப்பட்டுள்ளனர்.

பாடசாலை செல்லும் இம் மாணவர்களிற்கான உதவித்திட்டத்தை இவர்கள் பல்கலைக் கழகம் சென்றாலும் இதே உதவுதொகை தொடர்ந்து வழங்க ஏற்பாடு செய்துள்ளோம். அத்துடன் பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர்கள் 9 பேருக்கு மாதாந்தம் 5000/ வீதம் வழங்கி வருகின்றோம்.

ஏடு அமைப்பு கிளிநொச்சி மாவட்டத்தைத் தொடர்ந்து தனது உதவிக்கரங்களை மன்னார், திருகோணமலை, அம்பாறை மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களிலும் கால்பதித்துள்ளது. இதன் அடிப்படையில் மன்னார்- 75 மாணவர்கள், திருகோணமலை- 75 மாணவர்கள், அம்பாறை - 55 மாணவர்கள், முல்லைத்தீவில் 40 மாணவர்களிற்கும் இவ் உதவித்திட்டம் விஸ்தரிக்கப்பட்டுள்ளது. இப்பகுதி மாணவர்களிற்கும் துவிச்சக்கர வண்டிகள் மற்றும் கற்றல் உபகரணங்கள், வாழ்வாதார உதவித்திட்டங்களுக்கும் உதவிகள் வழங்கப் பட்டு வருகின்றது.

ஏடு அமைப்பின் ஊடாக பிரித்தானியாவைத் தலைமையகமாகக் கொண்ட பல அமைப்புக்கள் எமது பகுதிகளுக்குப் பல்வேறு உதவித்திட்டங்களுக்கான வசதிகளை அளித்து வந்தள்ளன. இவற்றில்

* Concern Srilanka Foundation
* Care for All - UK
* Scot - UK
* Miot-UK
* அறிவொளி வளையம் UK
* ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்மன் ஆலயம் (UK)
* பராசக்தி இந்து ஆலய நம்பிக்கை நிதியம் (UK)

என்பன பிரதானமான அமைப்புக்களாகும். இவற்றைவிட தனி நபர்கள் சார்ந்த பலரும் உதவிகளை வழங்கி வருகின்றனர். அமரர் ஆறுமுகநாதன் வீரசிங்கம் ஞாபகார்த்தமாக 2015 இலிருந்து மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள், பயிற்சிப் புத்தகங்கள் வழங்கி வருவதும் குறிப்பிடத்தக்கதாகும். இதில்

கிளி / விக்கினேஸ்வரா வித்தியாலயம் - பூநகரி
கிளி / கிளாலி றோ.க.பாடசாலை, பளை.
கிளி / முருகானந்தாக் கல்லூரி முரசுமோட்டை
கிளி / பன்னங்கண்டி இ.த.க.பாடசாலை, கிளிநொச்சி.
கிளி / அக்கராயன் பிரதேச பாடசாலைகளிற்க் 4 இல் 100 பேருக்கு உதவிகள்
கிளி / வலைப்பாடு றோ.க.பாடசாலை - பூநகரி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


கிளி / செம்மன்குன்று அ.த.க.பாடசாலை - பூநகரி
வவு / பன்றிக்கெய்தகுளம் அ.த.க.பாடசாலை,வவுனியா
யாழ் / யூனியன்கல்லூரி மாணவர்கள் - யாழ்ப்பாணம்.
கிளி / கோணாவில் காந்தி ஆரம்ப வித்தியாலயம், கோணாவில்.
கிளி / இராமகிருஸ்ண வித்தியாலயம் - பாரதிபுரம்.
போன்ற பாடசாகைளுக்கும் உதவிகள் வழங்கப்பட்டுள்ளது.

மேலதிகமாக கிளி/ஐயனார்புரம் அ.த.க.பாடசாலயில் அமரர் அறுமுகநாதன் வீரசிங்கம் ஞாபகார்த்தமாக கற்றல்வள நிலையம் ஒன்று ஏற்படுத்தப்பட்டு 2018ஆம் ஆண்டு முதல் செயற்பட்டு வருகின்றது. இதனை அவரது குடும்பத்தவர்கள் வருகை தந்து மேலும் உதவிகள் வழங்கி வசதிகளை ஏற்படுத்தி மாணவர்களின் பயன்பாட்டுக்கு ஊக்கம் அளிப்பவையாக உள்ளது. அமரர் ஆறுமுகநாதன் வீரசிங்கம் அவர்கள் ஞபகார்த்தமாக மாணவர்களுக்கு மதிய உணவும் வழங்கி வருவது குறிப்பிடத்தக்கது. வருடத்தில் இரண்டு தினங்கள் (பிறந்த தினம், இறந்த தினம்) நினைவு கூரப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

Concern Srilanka Foundation மூலமாக குறிப்பிட்ட காலப்பகுதிக்கு பல்கலைக்கழக உதவிகள் வழங்கியிருந்தோம். இதனைத் தொடர முடியவில்லை.

Scot-UK உதவியுடன் 4 குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவித்திட்டங்களும் வழங்கி வைததுள்ளோம். அவர்கள் வருமாறு

1. திரு.பா. மனோகரன் - பரந்தன்
2. திரு. மகாலிங்கம் சுரேஸ்- கிளிநொச்சி
3. திருமதி. திரு. கிஸ்ணவேணி
4. திருமதி ஜெயந்தன் விஜிதா







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Care for All அமைப்பின் மூலமாக இக் குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவியும் மாணவர்களுக்கு கற்றல் உதவிகளையும் வழங்கி வருகின்றோம். கிளி/ ஐயனார்புரம் அ.த.க பாடசாலையின் க.பொ.த சாதாரணதர மாணவர்கட்டு பயிற்சி வகுப்புக்களுக்கான கொடுப்பனவும், பயிற்சி புத்தகங்களும் இவ் வமைப்பின் ஊடாக பெற்றுக் கொடுத்துள் ளோம்.

ஏடு அமைப்பின் ஊடாக புலம்பெயர் நாட்டில் உள்ள எங்களது தமிழ் உறவுகள் பலரும் பல உதவிகளை வழங்கியுள்ளனர். இதில் கிளி/கிளாலி றோ.க. பாடசாலை, கிளி/ விக்கினேஸ்வரா வித்தியாலயம், கிளி/ முரகானந்தா ஆரம்ப வித்தியாலயம் போன்ற பாடசாலை மாணவர்கட்டு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளது. அதேவேளை சில பல்கலைக்கழக மாணவர்களது கற்றல் செயற்பாட்டுக்கான முழுக்கட்டணத்தையும் பொறுப்பெடுத்துள்ளது முக்கியமான விடயம். ஒரு மருத்துவபீட மாணவியையும் ஒரு கலைப்பீட மாணவியினதும் கற்றல் செலவுகளை முழுமையாகப் பொறுப்பு எடுத்து தனியாட்கள் உதவியளிக்கின்றனர்.

ஏடு அமைப்பின் வருடந்த ஒன்று கூடலின்போது மாணவர்களின் விசேட திறமைகள் இனங்கண்டு பாராட்ட ஊக்குவிக்கும். முறையும் நடைமுறைப்படுத்தி வருகின்றோம். மேலும் ஒன்று கூடலுக்கு வரும் மாணவர்களிற்கு பயண செலவுக் கொடுப்பனவாக அனைவருக்கும் 1000 ரூபா வழங்கப்பட்டு வருகின்றது.இவை ஏடு அமைப்பின் இணைப்பாளர் வைத்திய கலாநிதி அ.பகீரதன்,திரு.ப.சோமசுந்தரம் (ஈசன்) திரு.அழகேஸ் வரராஜா (பாண்டியன்) ஆகியோர் தமது சொந்த நிதிகள் ஊடாக வழங்கி வருவது குறிப்பிடத்தக்கதும் பாராட்டப்பட வேண்டியதுமாகும்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏடு அமைப்பின் இணைப்பாளர் என்ற வகையில் கிளிநொச்சி, மன்னார்/ முல்லைத்தீவு, அம்பாறை, திருகோணமலை, மாவட்ட நிர்வாகிகளுக்கு எமது மனப்பூர்வ மான நன்றிகளைத் தெரிவிப்பதோடு கிளிநொச்சி ஏடு செயற்பாடு தொடர்பில் உதவிவரும் நிர்வாகக் குழுவினர்களுக்கும் எமது அமைப்பின் காப்பாளர் வலயக்கல்விப் பணிப்பாளருக்கும் எமது நிகழ்வுகளை நடாத்த இட அனுமதி வழங்கிய கிளி / முருகானந்தாக் கல்லூரி, கிளி / கிளிநொச்சி ம.வி அதிபருக்கும் வேறு உதவிகளை வழங்கிய நலன் விரும்பிகள் . உணவுச் சிற்றூண்டிகளை வழங்கிய கற்பகம் உணவகத்தினருக்கும் கிளி நொச்சி மக்கள் வங்கி முகாமையாளருக்கும், பரந்தன் மக்கள் வங்கி முகாமையாளருக் கும் ஏனைய பகுதிகளின் மக்கள் வங்கி முகாமையாளர்களுக்கும் நன்றியையும் பாராட்டுக்க ளையும் தெரிவித்துக் கொள்கின்றேன். இந்நிகழ்விற்கு மாணவர்களை அனுப்பி வைக்கும், அழைத்துவரும் பாடசாலை அதிபர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு தொடர்ந்தும் ஏடு செயற்பட சகல ஒத்துழைப்புக்க ளையும் வழங்க வேண்டும் என தயவு கூர்ந்து வேண்டிக்கொள்கின்றேன். எல்லாவற்றுக்கும் மேலாக பிரித்தானியா தமிழ் உறவுகளிற்கு எமது நன்றியையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன். தொடர்ந்தும் ஏடு தலைமையக நிர்வாகத்தினரின் அயராது முயற்சியே எமது உயர்வுக்குக் காரணமாகும்.

இம்மலர் வெளியிடுவதற்கு உரிய நேரங்களில் வாழ்த்துச் செய்திகளையும், ஆக்கங்களையும் தந்துதவிய பெரியோர்களுக்கும், ஆசிரியர்கள், மாணவர்களுக்கும் ஏடு ஐக்கிய இராச்சிய இணைப்பாளர் வைத்தியகலாநிதி அ.பகீரதன் அவர்களுக்கும் இம்மலரை அச்சிட்டு உரிய நேரத்தில் தந்துதவிய எவகிறீன் பதிப்பகத்தினருக்கும் நன்றியையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

- நன்றி -





**ஏடு அமைப்பின் உதவிக்காக மாணவர்களை தெரிவு செய்யும் நேர்முகத்தேர்வு**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Message from a Students Beneficiary

It is indeed a privilege and I feel honored to write a note about this prestigious organization "AEDU Foundation" on completion of its successful journey of ten years in rendering help to the needy students of kilinochchi and Mullaitivu. I'm very sure that they really have made a positive impact in the lives of many students and have supported the course of promoting education in our part of the country.

As a student beneficiary of their services, I realize how their service have helped hundreds of students who pursue their education despite economic hardships of their families. I consider this organization as a blessing in disguise for the needy children.

In my knowledge, in addition to helping many school students ,university students (including medical students) financially for their education, this organization is proactive in providing educational tools and facilitates support to schools with needs. Also, provision of livelihood support to families in need , collaborative efforts with other social organizations in fulfilling the needs of our community are worth mentioning.

At this important juncture of their journey , I'm extremely thankful to the founder and the coordinator of United Kingdom Dr.Pakeerathan, and coordinator of srilanka MR.Varathan (principal) their farsighted vision in promoting education to enhance the overall standard of our community . I also extend my sincere gratitude to all the philanthropists , volunteer members and well wishers of the organization for their untiring efforts in bringing about a positive change to our society and helping us all to reach upliftment.

I wish Aedu foundation , all the very best to reach more heights in the future towards the creation of a better society and I'm sure that you all have inspired many youngsters like me to find interest in engaging in community oriented volunteer service and hope still more of us would join hands with you in future to achieve your vision of " increase the status of the community in the aspects of education and increase the quality of life"

Prayers and blessing for a your continuous journey..

**S. Kogulan,**
Medical Student,
Faculty of Medicine, University of Jaffna.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Message from a Students Beneficiary

It is indeed a great pleasure to [illegible] Aeda foundation [illegible] the [illegible] of the needy students of [illegible] and [illegible] I'm very [illegible] that they really have made a positive impact on the lives of many students and have supported the welfare of people [illegible] part of [illegible].

As a student beneficiary of their services, I realize how their services have helped hundreds of students who pursue their education despite economic hardships of their families. I consider this organization as [illegible] for the needy children.

In my knowledge, in addition to helping many school students university students (including medical students) financially for their education, this organization is proactive in providing educational tools and facilitates support to schools with needs. Also, provision of livelihood support to families in need, collaborative efforts with other social organizations in fulfilling the needs of our community are worth mentioning.


At this important juncture of their journey, I'm extremely thankful to the founder and the coordinators of United Kingdom, Dr. [illegible] and coordinator of Srilanka Mr. Varathan [illegible] their far sighted vision in promoting education to enhance the overall standard of our community. I also extend my sincere gratitude to all the philanthropists, volunteer members and well wishers of the organization for their untiring efforts in bringing about a positive change to our society and helping us all to reach upliftment.

I wish Aeda foundation all the very best to reach more heights in the future towards the creation of a better society and I'm sure that you all have inspired many youngsters like me [illegible]

[illegible]

[illegible]
[illegible]
[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




எவகிறீன் அச்சகம் 693,கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். தொ.பே : 021 2219893

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org